விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 11 புதன்கிழமை (27.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 343

### தமிழர் தாயகத்தில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படும் நிலையில்

## யாழ்.பல்கலை வளாகத்துக்குள் நுழைய மாணவர்களுக்கு இரு நாட்கள் தடை

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகம் முழுவதும் இன்று மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் யாழ் பல்கலைக்கழக வளாகத்துக்குள் இன்றும் நாளையும் மாணவர்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் இன்றைய தினம் மாவீரர் தினத்தை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாண பல்கலையிலும் மாணவர்கள் நினைவுநாள் ஏற்பாட்டை முன்னெடுத்திருந்தனர். 23

### தமிழர் தாயகம் எங்கும் அமைதியான முறையில்

## கண்ணீர்க் காணிக்கைக்கு தயாரான துயிலுமில்லங்கள்




(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்மையே கொடையாக்கிய புனிதர்களான மாவீரர்களை நினைவெழுச்சியுடன் வணக்கம் செலுத்தும் மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் அமைதியான முறையில் இன்று நடைபெறவுள்ளது. மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வுக்காக அனைத்து துயிலும் இல்லங்களிலும் ஏற்பாடுகள் பூர்த்தி அடைந்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகளுக்கு

## வெள்ளி முதல் விடுமுறை

(கொழும்பு)

மூன்றாம் தவணைக்கான அரச பாடசாலை விடுமுறை இம்மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

அதேவேளை அடுத்த வருடத்திற்கான முதலாம் தவணை 23

### கிளிநொச்சியில்

## முதியவரின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஜெயபுரம் பகுதியில் வீதியோர கால்வாயிலிருந்து நேற்று முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் ஜெயபுரம் 23

## சபாநாயகராக கரு ஜயசூரிய தொடர்வார்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் சபாநாயகராக கரு ஜயசூரியவையே தொடர அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அரச தரப்பின் மூத்த தலைவர் 23

### வடக்கின் பல்வேறு பகுதிகளில்

## இராணுவம், பொலிஸார் நேற்று கடும் சோதனை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று வீதிகளில் பொலிஸார், இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு, வீதித் தடைகளை ஏற்படுத்தி, கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதனால்வீதியில்பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதுடன், சோதனை 23

## வடக்கு ஆளுநராகிறார் முத்தையா முரளிதரன்?

(கொழும்பு)



வடக்கு ஆளுநராக முத்தையா முரளிதரன் நியமிக்கப்படவுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

வடக்கு ஆளுநர் பொறுப்பை ஏற்க, முன்னர் முரளிதரன் தயக்கம் காட்டி வந்தபோதும் தற் 23

### யாழ்ப்பாணத்தில்

## வெங்காயத்தின் விலை அதிகரிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் பெரிய ஊர்வெங்காயத் தின் விலை அதிகரித்துள்ள நிலையில், யாழ்ப்பாண 23

## மாவீரர்களின் கல்வெட்டுக்கள் மக்கள் அஞ்சலிக்காக நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மக் 23



## மாவீரர் தினத்தை சண்டைக்களமாக மாற்றாமல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்போம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)


மாவீரர்தினத்தை சண்டைக்களமாக மாற்றாமல் பக்குவமாக, கவனமாக, உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க வேண்டுமென தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். 23

இப் பிரசுரமானது மக்களிடையே பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (IOM) நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றது. தொடர்ந்து 5 நாட்கள் வெளியிடப்படும் இப்பிரசுரிப்பை வாசித்து பயன் பெறுவதோடு இறுதியில் தரப்படும் போட்டி நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுங்கள்

# சரியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண்பது எப்படி?

எம்மில் பலர் போலியான வெளிநாட்டு முகவரின் மோசடி வலையில் சிக்கி பெருமளவான பணத்தை இழந்திருக்கலாம் அல்லது அவ்வாறாக பாதிக்கப்பட்டவர்களது அனுபவங்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின் எவ்வாறு அவர்களை இனங்காண்பது என்பதனை தெரிந்துகொள்ள ஆர்வமாய் இருக்கிறீர்களா? அப்படியாயின் இப்பகுதியை முழுமையாக வாசிக்கவும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவர் தம்மை வெளிநாட்டு தொழிலுக்காக ஆட்களை சேர்த்துக்கொள்ளும் செயற்பாட்டிற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்திருத்தல் அவசியமாகும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட முகவர் எனில் அவரிடம் பதிவுத் தகவல்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்று காணப்படும். வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்வதற்கு முகவரை அணுகும் எவரும் அவரிடம் சான்றிதழ் ஒன்று உள்ளதா? என்பதனை கவனத்தில் கொள்கின்றோமா என்றால் பலர் இல்லை என்ற பதிலைத்தான் கூறுவார்கள். அவ்வாறு சான்றிதழை பரிசிலிப்பதன் மூலம் முகவர் போலியான முகவரா? அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவரா? என்பதனை அறிந்து கொள்ள முடியும். பதிவுசெய்யப்பட்ட முகவர் ஒருவரது பதிவுச் சான்றிதழ் ஆனது பின்வரும் வடிவத்தில் அமைந்திருக்கும்.





முகவரிடம் நாம் சான்றிதழை கோரும் பொழுது அவர் தடுமாற்றத்திற்கு உட்படுவாராயின் சான்றிதழ் போலியானதாகவோ அன்றி பதிவு செய்யப்பப்படாத முகவராகவும் அமையலாம். போலி முகவர் போலவே போலி சான்றிதழகளும் உள்ளன. அவற்றை கொண்டு போலியான முகவர் எம்மை இலகுவாக ஏமாற்றிவிடுவார்.

மேலும் பெரும்பாலான முகவர்கள் பதிவு செய்யப்பட்ட ஒருமுகவரின் கீழ் இயங்கும் உப முகவர்களாக காணப்படுவதனால் அவர்கள் பண மோசடிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். உதாரணமாக கொழும்பில் பதிவு செய்யப்பட்ட முகவரின் பதிவுச்சான்றிதழை கொண்டு யாழ்ப்பாணத்தில் ஒரு உப முகவர் இயங்குவாராயின் அவரிடம் செலுத்தப்பட்ட பணம் மோசடி செய்யப்படுமிடத்து பிரதான முகவர் பொறுப்புக்கூற மாட்டார். இதனைத் தவிர்க்க நாம் சான்றிதழுக்குரியவரின் அடையாளத்தை அவரது ஆள் அடையாள ஆவணங்களுடன் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் எப்போதும் பணக்கொடுக்கல்-வாங்கல்களுக்கு முறையாக பற்றுச்சீட்டு ஒன்று பெற்றுக்கொள்ளல் அவசியமாகும்.ஏனெனில் பின்னாளில் அவர் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் இப்பற்றுச்சீட்டு காவல் நிலையத்தில் புகார் தெரிவிப்பதற்கான ஓர் பிரதான சாட்சியாகக் காணப்படும்.

தவிர முகவரின் சான்றிதழில் காணப்படும் பதிவு இலக்கத்தையும், பதிவுத் திகதியையும் குறித்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் முகவர் ஒருவரது பதிவானது இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். மீண்டும் அவர் பதிவைப் புதுப்பிக்காத பட்சத்தில் அவரது பதிவு செல்லுபடியற்றதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் முகவர்தான் முன்னர் பதிவு செய்த சான்றிதழை வைத்தே மோசடி வேலைகளில் ஈடுபடக்கூடும்.


புதிவை உறுதிப்படுத்துவதற்கு நாம் பின்வரும் வழிமுறைகளின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தள முகவரி www.slbfe.lk
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பின்வரும் நேரடி தொலைபேசி இலக்கங்களுக்கு ஊடாகவும் அறிந்து கொள்ள முடியும்
  - → 1989
  - → 011 288 0500
- தங்களது பிரதேச செயலகத்திற்கு சென்று அங்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அணுகியும் விபரம் பெற முடியும்.

தவிர உத்தியோகபூர்வ முகவர் உங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வேலை ஒப்பந்தத்தில் கையொப்பமிட அழைத்துச் செல்வார்

முகவர் ஒருவரது பதிவினை எவ்வாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இண்ணயத் தளத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடியும்?

1. முதலில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையத்தளத்திற்கு (www.slbfe.lk.) செல்லவும்
2. அங்கே Recruitment Agencies என்ற பகுதியை திறந்து கெள்ளவும்




இங்கே 1 என கட்டமிட்டு காட்டப்பட்ட பகுதிக்குள் சான்றிதழின் இலக்கத்தை பதிவு செய்து Search என்ற 2 என வட்டமிட்டுக் காட்டப்பட்ட பொத்தானை அழுத்துவதனூடாக முகவர் பதிவு செய்யப்பட்ட முகவரா? இல்லையா? என்ற விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்..

முகவர் ஒருவரது பதிவு பின்வரும் காரணங்களுக்காக புதுப்பிக்கப்படாமல் / இரத்து செய்யப்பட்டிருக்கும்

- கடந்த காலங்களில் அவர் ஏதேனும் மோசடி வேலைகளில் ஈடுபட்டமை
- பதிவைப் புதுப்பிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளாமை
- அவரின் கடந்தகால மோசமான செயற்பாடு காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அவரது பதிவை இரத்து செய்தல்


எனவே வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக முகவர் ஒருவரை அணுகும் போது அவரது சான்றிதழ் தொடர்பாக அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் பிற்காலத்தில் ஏற்படக் கூடிய பொருளாதார மற்றும் உயிர், உள இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்கள் தொடர்பான விபரங்களை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

அவை தவிர வீசாவுக்கான ஆலோசனை நிலையங்கள் பல நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற போதிலும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்,ஆலோசனை நிலையங்கள் என அந்தநாட்டுக்குரிய தூதரக இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்ட முகவர் ஆலோசனை நிலையங்களை நாடுதலே பாதுகாப்பான பயணத்துக்கு வழிவகுக்கும்

மேலதிக தகவல்களுக்கும், பாதுகாப்பான வெளிநாட்டு பயணம் தொடர்பாகவும் தங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருப்பின் IOM ன் நேரடி தொலைபேசி இலக்கமான 077 441 0086 என்ற எண்ணுக்கு அழையுங்கள். உங்களுக்கு உதவ நாம் தயார்.அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றைய விடய பரப்பு நிச்சயமாக உங்களுக்கு பிரயோசனமான ஒன்றாக அமைந்திருக்கும் என்ற நம்பிக்கையோடு நாளை IOM நிறுவனத்தின் உலகளாவிய ரீதியில் முறையற்ற புலம்பெயர்வாளர்களுக்கான உதவி திட்டம் தொடர்பில் அறிந்து கொள்வோம். தொடர்ந்து இந்த ஒருவாரமும் எம்முடன் இணைந்திருப்பதனூடாக ஒவ்வொரு வாரமும் பெறுமதியான பரிசில்களை வெல்லும் வாய்ப்பை பெறுவதோடு, கீழேதரப்படும் குறுக்கெழுத்து புதிருக்குரிய விடைகளை கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்புவதனூடாக நாளொன்றுக்கு தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்லும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், கீழே கட்டமிட்ட பகுதியில் காணப்படும் கேள்விக்கான விடையை கீழ்க்காட்டப்பட்ட SMS வடிவத்தில் தரப்பட்ட தொலைபேசி இலக்கத்துக்கு குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் சரியான விடைக்குரியவர்களும் இத் தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகளை வெல்ல முடியும். போட்டி இறுதித் திகதியின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள் பத்திரிகையில் அறியத்தரப்படுவார்கள். வெளிநாடு செல்வது தொடர்பாக அல்லது முறையற்ற வெளிநாட்டு பயணத்தால் பாதிக்கப்பட்ட நபர் தொடர்பான உதவித் திட்டங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாக அழைத்து விபரங்களை பெற முடியும் 077 441 0086

## குறுக்கெழுத்து போட்டி இல -03



**மேலிருந்து கீழ்**

1. வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவரை இனங்காண பயன்படுத்தப்படும் பிரதான ஆவணத்தில் கவனிக்க வேண்டிய ஒரு விடயம் (காலம் சார்ந்தது)
3. … … … … … பண மோசடி தொடர்பில் முறையிடும் போது ஒரு சாட்சி பத்திரமாக விளங்கும்
4. முகவர் ஒருவரின் பதிவுக்காலம் …………ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாகும்
5. போலிமுகவர் ……………நடவடிக்கையில் ஈடுபடுவார்

**இடமிருந்து வலம்**

2. பதிவு செய்யப்படாமல் பதிவு செய்யப்பட்ட முகவர் ஒருவரின் கீழ் இயங்கும் நபர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
3. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண பயன்படுத்தப்படும் பிரதான ஆவணம் எது
4. வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரை இனங்காண பயன்படுத்தப்படும் பிரதான ஆவணத்தில் கவனிக்க வேண்டிய இன்னொரு விடயம் (எண் சார்ந்தது)
6. போலி முகவர் தொடர்பான செயற்பாடுகளை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முடியும் சரி/பிழை
7. 1989
   011 288 0500
   மற்றும் 077 441 0086 என்பன முறையே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் IOM என்பனவற்றின் ………………தொலைபேசி இலக்கம் அகும்
8. உத்தியோக பூர்வ முகவர் தொழில் ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் பணியகம் எது?

**குறுக்கெழுத்து போட்டிக்கான விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி திகதி- 05.12.2019, குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் புத்திரிகையில் கட்டத்தினை வெட்டி அனுப்பலாம். அல்லது சுயமாகத் தயாரிக்கப்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம். எந்த வயதுப் பிரிவினரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.**

**கடித உறையின் இடது மூலையில் குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகள் (அன்றையதிகதி) என குறிப்பிட்டு அனுப்பவும்**
**பின்வரும் விபரங்களையும் விடைகளுடன் இணைத்து அனுப்பவும்**
**பெயர்:**
**வயது:**
**பால்:**
**முகவரி:**
**தொலைபேசி இலக்கம்:**
**(சிறுவர்களாயின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்)**
**அனுப்ப வேண்டிய முகவரி:** ☞ **IOM**
**இலக்கம் 139,**
**கோயில் வீதி,**
**நல்லூர்.**

தங்களது நெருங்கிய நண்பரோ அல்லது குடும்ப உறுப்பினரோ தங்களை வெளிநாடு ஒன்றுக்கு சுற்றுலா விசாவில் செல்லுமாறும் அங்கு கிடைக்கக் கூடிய ஏதாவது வேலையை கொஞ்ச நாட்கள் செய்து வருமாறும் வேலைக்கான அனுமதி ப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும்வரை கிடைத்த அந்த வேலையை செய்து வருமாறும் கூறுகிறார்? இது ஒரு முறையான/பாதுகாப்பான புலம்பெயர்வு என தாங்கள் நினைக்கிறீர்களா? • ஆம் • இல்லை

இக்கேள்விக்கான பதிலை கீழ்க் குறிப்பிட்ட முறையில் IOM இன் நேரடி தொலைபேசி இலக்கமான 077 441 0086 க்கு SMS /குறுஞ்செய்தி அனுப்புவதனூடாக தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளை குலுக்கல் முறையில் வெல்லவும்.

**SMS /குறுஞ்செய்தி அனுப்ப வேண்டிய வடிவம்**
**பால் வயது இடம் விடை ------ 077 441 0086**
**உதாரணம் : M-14-Jaffna-Answer**
**ஆண்-14-யாழ்ப்பாணம்-சரியான விடை**

(C-8914)

# மக்களின் நாயகனை வாழ்த்தி வரவேற்கின்றோம்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்
கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சருமான

## கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள்

தமிழ் மக்கள் போற்றும் நிகரான தலைவனே! நாடாளுமன்றம் தன்னில் மக்களுக்காக குரல் கொடுத்தீர், பார் போற்றும் உத்தமனாய் வந்துதித்த அமைச்சரே! பல்கலையின் ஜனநாயக ஊழியர் சங்கம் தனை எமக்காக உருவாக்கி எமக்கென சேவைதனை பெற்றுத் தந்திடவே மக்கள் சுயமாக வாழ்வதற்கு வாழ்வாதாரம், புகையிரதச் சேவை மட்டுமல்ல சொல்ல முடியாத இன்னும் பல சேவைகளை எமது மக்களுக்கு செய்து தந்த **மக்களின் நாயகனை**, யாழ் மக்கள் அணிதிரண்டு **அமைச்சர்** எனும் நாமத்தோடு வரவேற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**யாழ்பாணப் பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கம்**

(1303)

# காணவில்லை



கைதடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிட மாகவும் கொண்ட **கந்தையா விக்னேஸ்வரன்** அவர்கள் 16.11.2019 அன்று முதல் காணவில்லை. இவரைப் பற்றி தகவல் தெரிந்தால் தயவுசெய்து கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத் தரவும் (1305)

தொடர்புகளுக்கு:-
**0776494711**


## புதிய ஆங்கிலப் பாடநெறி
## சனி, ஞாயிறு தினங்களில்



DIPLOMA IN ENGLISH
(06 மாதங்கள்) சனி, ஞாயிறு தினங்களில் 1.00 - 3.00 pm

ஆரம்பம் : *30.11.2019 at 1.00 pm*
(16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான பாடநெறி)

**E-CITY**
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 7106 / 077 340 0418 / 077 061 5242 / 077 492 4166
web: www.ecitycollege.lk
(C-8323)


# அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


அனைத்துபீட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக வளாகத்தினுள் 27.11.2019 மற்றும் 28.11.2019 ஆகிய தினங்களில் உட்பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தினுள் நுழைவதனையும் அனுமதி அளிக்கப்படாத எந்தவொரு நடவடிக்கையில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

**தகுதிவாய்ந்த அதிகாரி**
26.11.2019
(C-8347)

# மரண அறிவித்தல்

மலர்வு 10 - 08 - 1939



உதிர்வு 25 - 11 - 2019

## தம்பையா சர்வேஸ்வரன்

### (தெய்வம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் குருவளை, அளவெட்டி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சர்வேஸ்வரன் கடந்த 25.11.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சர்வேஸ்வரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா கனகமாணிக்கத்தின் மைத்துனனும் பிரகலாதன் (Dubai), துளசி (UK), சேரலாதன் (Abu dhavi), வாசுகி, யாழினி ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷ்யந்தி, சிவகுமாரன், கலைச்செல்வி, Dr.கு.சுரேஸ்குமார், ஞானபரன் ஆகியோரின் மாமனாரும் ஹரிஷ்கா, தனுஷியன், துவாரகி, மயூரகி, சாருகேசி, அர்ச்சனா, சசிக்கா, பிரவீன், லோகித், லாவித் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2019) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இல.15, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் நடைபெற்று பூதவுட்ல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

**சம்பியன் லேன்,**
**கொக்குவில்.**

(1198)


தகவல்:
**மருமக்கள்**

# மரண அறிவித்தல்

## கந்தையா தேவதாசன்

### (தேவர், நவரத்தினம்)

பிறப்பு 05.05.1937 | இறப்பு 26.11.2019



கொயிலாமனை கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தேவதாசன் (தேவர் நவரத்தினம்) அவர்கள் நேற்று (26.11.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதிகளின் மகனும் செல்வமலரின் அன்புக் கணவரும் உதயகுமாரி (ஆசிரியர் - யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்), உதயகுமாரன், உதயதாசன் (லண்டன்), உதயகாந்தன் (லண்டன்), உதயசேகர் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமியின் (திரவியம்) சகோதரனும் தவத்துரை (எரிபொருள் நிரப்பு நிலையம், கொடிகாமம்), பாஸ்கரி, கௌசல்யா (லண்டன்), வக்சலா (லண்டன்), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அஜிதா (வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி - ஆசிரிய மாணவி), அபீதன், கோபிகன் (உயர்தர மாணவன் 2019 - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சஜீகா (உயர்தர மாணவி - கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), பவீதன், தஜீவன், தருசன், திபிஜன் (மாணவர்கள் - யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), பவிஷன் (யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை), மதுசிகா, ஆசகா, லக்மியா (லண்டன்), ஜஷானி, ஜனிஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் சிவகணேசன் (ஆசிரிய ஆலோசகர் - நீர்கொழும்பு), சந்திரகணேசன் (சுவிஸ்), கமலினி (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டைபறித்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொயிலாமனை,**
**கொடிகாமம்.**

(C-8342)


தகவல்: **குடும்பத்தினர்**
**077 409 0751**

# இந்திய அணியில் மீண்டும் பங்கேற்பாரா டோனி? பதிலளிக்கின்றார் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி



இந்திய அணியின் சாதனைக் கப்டனாக திகழ்ந்த எம் எஸ் டோனி, இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கோப்பை தொடருக்குப் பின், இராணுவத்தில்பணி புரிய இருப்பதால் சிறிது காலம் ஓய்வு எடுத்திருந்தார். அவ ரது ஓய்வுக் காலம் முடிந்த பின்னரும் அணியில் சேர்க்கப்படாமல் இருக்கிறார்.

இதனால் அடுத்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் டி20 உலகக்கோப்பை அணியில் அவர் விளையாடுவாரா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. அணி நிர்வாகம் மற்றும் முக்கிய வீரர்களிடம் இதுகுறித்து கேட்டால், அது எம்எஸ் டோனியின் முடிவு. அவரது ஓய்வு முடிவை அவர் தான் எடுப்பார் என்று தெரிவித்து வருகின்றனர்.




இந்நிலையில் அவர் 2020 ஐபிஎல் தொடரில் எப்படி விளையாடுகிறார் என்பதை சார்ந்துதான் அணிக்கு திரும்பும் முடிவு எடுக்கப்படும் என தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

எம்எஸ் டோனி குறித்து ரவி சாஸ்திரி கூறுகையில் "எம்எஸ் டோனி மீண்டும் கிரிக்கெட் விளையாடும்போது, அவர் 2020 ஐபிஎல் தொடரில் எப்படி விளையாடுகிறார் என்பதை பொறுத்துதான் இந்திய அணிக்கு திரும்புவது குறித்து முடிவு செய்யப்படும். விக்கெட் கீப்பராக மற்ற வீரர்கள் எப்படி செயல்படுகிறார்கள். டோனியின் ஃபார்முக்கு சவாலாக யார் இருக்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும்.

ஐபிஎல் மிகப்பெரிய தொடர், ஏனென்றால் ஏறக்குறைய உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட அணியை தேர்வு செய்தபிறகு நடக்கும் கடைசி தொடராகும்" என்றார்.

# சிறப்பாகத் துடுப்பாடவில்லை என்றால் அணிக்குச் சுமையாகி விடுகிறேன் - கிறிஸ் கெய்ல்



சில போட்டிகளில் சிறப்பாக துடுப்பெடுத்தாடவில்லையென்றால் அணிக்கு சுமையாகி விடுகின்றேன் என அதிரடி துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் ஆதங்கத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

இவர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் மான்சி சுப்பர் லீக் தொடரில், முதல் ஆறு போட்டிகளில் விளையாட நடப்பு சம்பியன் ஜோசி ஸ்டார்ஸ் அணியுடன் ஒப்பந்தம் செய்திருந்தார்.

இதற்கமைய அந்த அணி 6 போட்டிகளில் விளையாடி ஒன்றில் கூட வெற்றி பெறவில்லை. இறுதிப் போட்டியில் கிறிஸ் கெய்ல் அரைசதம் அடித்தாலும் அந்த அணியால் வெற்றி பெற முடியவில்லை.

இந்த தோல்வி ஏமாற்றத்தினால் கிறிஸ் கெய்லின் துடுப்பாட்டம் குறித்து கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இதனால் கெய்ல், தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து கிறிஸ் கெய்ல் கூறுகையில் "நான் இந்த அணியைப் பற்றி மட்டும் பேசவில்லை. கடந்த சில வருடங்களாக விளையாடி வரும் எல்லா அணிகளையும் பற்றி இந்த விடயத்தை பற்றி ஆராய்ந்துள்ளேன். ஒன்றிரண்டு போட்டிகளில் நான் விளையாடவில்லை என்றால், நான் அவர்களுக்கு சுமையாகிவிடுகிறேன். இது போன்று ஒரு தனிப்பட்ட வீரர் அணிக்கு சுமையாகி விடுகிறார்" என்று தெரிவித்துள்ளார்.

# யாழ் கல்வி வலயத்தில் மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா) தரப் பரீட்சைக்குத் தோற்றும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா தலைமையில் நடைபெறும்.

யாழ் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறும் ஆசி வழங்கும் இந் நிகழ்வில் க.பொ.த (சா) தரப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலைகளின் மாணவர் பிரதிநிதிகள் பங்கேற்பர். (ம)

## ஐ.சி.சி டெஸ்ட் தரவரிசையில்

# விராட் கோலிக்கும் ஸ்மித்துக்கும் நிலவுகிறது கடும் போட்டி

## முதல் பத்து இடத்திற்குள் இந்திய வீரர்கள் 4 பேர்

ஐசிசி டெஸ்ட் தரவரிசையில் ஸ்மித்திற்கும் விராட் கோலிக்கும் இடையில் கடும் போட்டி நிலவி வரும் நிலையில், முதல் 10 இடத்திற்குள் நான்கு இந்தியர்கள் இடம் பிடித்துள்ளனர்.

இன்று வெளியிடப்பட்டுள்ள ஐசிசி டெஸ்ட்பேட் ஸ்மேன்கள் தரவரிசையில் ஸ்டீவ் ஸ்மித் 931 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளார். விராட் கோலி 928 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தில் உள்ளார்.இருவருக்கும் இடையில் மூன்று புள்ளி களே வித்தியாசம். 29-ந்தேதி தொடங்கும் 2-வது போட்டியிலும் ஸ்மித் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினால்விராட் கோலி முதல் இடத்தை பிடிக்கவாய்ப்புள்ளது.

வங்காளதேச அணிக்கெதிராக இரட்டை சதம் அடித்ததன் மூலம் 700 புள்ளிகளுடன் மயங்க் அகர்வால் 10-வது இடத்திற்கு முன் னேறியுள்ளார். புஜாரா 791 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும், 759 புள்ளிகளுடன் ரகானே 5-வது இடத்திலும் உள்ளனர். இந்திய பேட்ஸ்மேன்கள் நான்கு பேர் முதல் 10 இடத்திற்குள் உள்ளனர்.


மகளிர்க்கான புதிய தொகுதி பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

டிசெம்பர் 2 திங்கள்



Make-up, Facial
Cake Decoration
Dress Making
Hair

Aari Work
Embroidery Classes
(குழுவாகவும் தனியாகவும் பயிலலாம்)





Fabric Painting(உடையில் அலங்காரமிடல்)
Screen Printing (ஸ்கிறீன் அச்சிடல்)
Drawing & Painting (ஓவியக் கலை)
Handy Craft(கைப்பணி–சிறுதொழில்கள்)





மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் தரப்படும்.
குறைந்தது தனிஒரு பயிற்சியிலும் கலந்து கொள்ளலாம்
கலந்துகொள்ள விரும்புவோர் பெயர்களை பதிவு செய்யவும்.
2.12.2019 திங்கள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றன.

தூரிகை நுண்கலை வளாகம்
241 யாழ்வீதி நாவலர்மடம், நெல்லியடி.
மத்திய கல்லூரி வீதி நெல்லியடி.


# மரண அறிவித்தல்



## சிவஸ்ரீ சாமி கனகசபாபதிக்குருக்கள்

உடுப்பிட்டி ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சாமி கனகசபாபதிக்குருக்கள் நேற்று (26.11.2019) செவ்வாய்க்கிழ்மை காலமானார்.

அன்னார் ஆவரங்கால் சாமிக்குருக்கள் - கேகிலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகனும் கிஷ்ணஐயர் - கோமதி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், இராமிர்த அம்மாவின் அன்புக்கணவரும், வடிவாம்பிகை, கனகாம்பிகை, மோகனாம்பிகை, கேதீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சோமசபேசக்குருக்கள்(இணுவில்), கேதீஸ்வரக்குருக்கள்(உசன்) கலாராசக்குருக்கள் (உரும்பிராய்), தர்சினி(புத்தூர்) ஆகியோரின் மாமனாரும், ராஜாராம் ஹம்சினி, தரணீதரசர்மா, பவப்பிரியசர்மா, சிந்துஜா, அபிலேஸ் சர்மா, அபிநயா, நவமித்ரசர்மா, நவஜித்ரசர்மா ஆகியோரின் பேரனும், தத்வமயியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு முள்ளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள்வும்.

ஸ்ரீ சந்திரசேகர
வீரபத்திரசுவாமி கோவில்.
உடுப்பிட்டி

(C-8347)

தகவல்:-
சிவஸ்ரீ கனக கேதீஸ்வரக்குருக்கள்
(கண்ணன் ஐயா)
0776930849.0212263364

## நினைவேந்தல் நிகழ்வில் அமைதியான முறையில் கலந்து கொள்ளுங்கள்

# இன்னுயிர்களை ஈகம் செய்த விடுதலை வீரர்கள் மக்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பர்!

## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**எமது மக்கள் சுதந்திரமாகவும் சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த எமது விடுதலை வீரர்கள் எமது மக்களின் மனங்களில் எப்பொழுதுமே வாழ்ந்து கொண்டிருப்பர் எனத் தெரிவித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வென் றெடுப்பதற்குமாக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த விடுதலை வீரர்களை நினனவுகூரும் நினைவேந்தல் நிகழ்வுகளில் அமைதியான முறையில் கலந்து கொள்ளுங்கள் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.**

ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வென்றெடுப்பதற்குமாக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த விடுதலை வீரர்களை நினனவுகூர்ந்து நினைவு நாள் அனுஷ்டிப்பது வரலாற்றுக் காலம் தொட்டு உலகம் பூராகவும் மனித நாகரிகத்தின் முக்கிய பண்பாக காணப்படுகின்றது.

விடுதலை வீரர்களை நினைவுகூர்ந்து அவர்கள் சார்ந்த ஒரு ஒட்டுமொத்த மக்கள் கூட்டமும் வருடாவருடம் நினைவு நாளை அனுஷ்டிப்பது அந்த விடுதலை வீரர்களின் தியாகத்தை நன்றியுடன் நினைவுகூருவதற்கு மட்டுமன்றி அவர்களின் உறவினர்களின் உள்ளக் குமுறல்கள் மற்றும் வேதனைகளுக்கான ஒரு ஆறுதலை அளிப்பதற்கும் வழிவகுக்கிறது.

ஆனால், யுத்தம் நடைபெற்ற போது தமது உயிர்களை நீர்த்த விடுதலை வீரர்களை கார்த்திகை மாதத்தில் நினைவுகூருவதற்கு கடந்த காலங்களில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு பல்வேறு தடைகளும் இடைஞ்சல்களும் நாகரிகமற்ற முறையில் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இருந்தபோதிலும், சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதி ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் மிகவும் அமைதியான முறையில் உணர்வுபூர்வமாக கார்த்திகை மாத நினைவுகூரலை எமது மக்கள் செய்து வருகிறார்கள்.



இன்று 27 ஆம் திகதி வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் நினைவுநாள் நிகழ்வுகள் அமைதியான முறையில் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிகின்றேன்.

அமைதியான வழியில் உரிய சட்ட வழிமுறைகளைப் பின்பற்றி எமது மக்கள் இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். நாட்டில் நிலையான சமாதானத்தையும் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு பாடுபடப்போவதாக கூறியிருக்கும் புதிய அரசாங்கம் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் எந்த இடையூறுகளும் இன்றி நடைபெறுவதற்கு ஆவன செய்யும் என்று எதிர்பார்க்கிறேன்.

எமது மக்கள் சுதந்திரமாகவும் சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த எமது விடுதலை வீரர்கள் எமது மக்களின் மனங்களில் எப்பொழுதுமே வாழ்ந்து கொண்டிருப்பர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் 900 அதிகாரிகள் இட மாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் சுமார் 900 அதிகாரிகள் ஏனைய பொலிஸ் பிரிவுகளுக்கு இடமாற்றப்பட்டனர்.

கடந்த 24 ஆம் திகதி முதல் 900 ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன உத்தர விட்டதாகவும் அதன் பின்னர் அவர்கள் பணிபுரிய விரும்பும் இரண்டு பிரிவுகளுக்கு அவர்களைப் பெயரிட அனுமதி வழங்கியதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இடமாற்றப் பட்டியலில் இரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும் நான்கு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களும் ஐந்து பொலிஸ் அத்தியட்சகர்களும் ஏழு தலைமை பொலிஸ் பரிசோதகர்களும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


விஷன் கெயா ஹியரிங் சொலுஷன்ஸ் தனது பத்தாம் வருட நிறைவை முன்னிட்டு பெருமையுடன் வழங்கும்

### ஷ்ரவண ப்ரணாம

விஷன் கெயாரானது கேட்டல் புலன் பராமரிப்புத் துறையில் முத்திரை பதித்த ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் கேட்டல் புலன் பராமரிப்பு தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் போதிய அறிவையும் விழிப்புணர்வையும் வழங்கும் நோக்கில், சர்வதேச ரீதியில் உயர்தொழினுட்பத்துடன் கூடிய அதிசிறந்த கேட்டல் புலன் கருவிச் சந்தையை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. இன்றைய சுகாதாரத்துறையில் சிறந்த முத்திரையை தன்னகத்தே கொண்டிருக்கும் விஷன் கெயா ஹியரிங் சொலுஷன்ஸ் நிறுவனமானது இந்த வருடம் பெருமையுடன் தனது பத்தாம் வருட நிறைவைக் கொண்டாடுகிறது.

சமூகப்பொறுப்பினை நன்குணர்ந்த நாம் எமது சேவை மற்றும் தரத்திற்கு முன்னுரிமையளித்து பத்தாம் வருட நிறைவினைக்கொண்டாடும் முகமாக விஷன் கெயா ஹியரிங் சொலுஷன்ஸ் நாடுமுழுவதும் "ஷ்ரவண ப்ரணாம" எனும் விசேட கேட்டல் புலன் பரிசோதனை முகாம்களின் தொடர் ஒன்றை நடாத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த (ஷ்ரவண ப்ரணாம) பரிசோதனை முகாமில் பங்கெடுக்கும் அனைவருக்கும் அன்றைய தினம் அனுபவம் மிக்க கேட்டல் புலன் நிபுணர்களை சந்தித்து உங்கள் கேட்டல் புலன் தொடர்பான பிரச்சனைகளுக்கு போதிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இந்நிகழ்வில்,

- பூரண இலவச கேட்டல் புலன் பரிசோதனை
- காதினுள் குடுமி அடைப்பு தொடர்பான பரிசோதனை
- காது குறைபாட்டினால் அவதிப்படும், கேட்டல் புலன் கருவியை உபயோகிக்கும் ஒருவருக்கு அக்கருவியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
- புதிய கேட்டல் புலன் கருவிகள், இதர உபகரணங்கள் மற்றும் பற்றரிகளை விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த பரிசோதனை முகாமின் விசேட அம்சமாக, இத்தினம் வருகை தரும் அனைவருக்கும் விஷன் கெயார் "ஷ்ரவண ப்ரணாம" எனும் விசேட அங்கத்துவ அட்டையைப்பெற்றுக்கொள்ளும் சிறந்த வாய்ப்பு கிடைக்கப்பெறும். இந்த அட்டையை உரித்தாக்கும் அனைவருக்கும் 2020 ஆம் வருடம் முழுவதும் இலவசமாக மேற்குறிப்பிட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் விசேட விலைக்கழிவுகளையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.



இந்த சிறந்த வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டது என்பதால் இது சம்பந்தமாக கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு இம்முகாமில் பங்கெடுப்பதற்கான நேரத்தை முற்கூட்டியே பதிவு செய்வது அவசியம்.

பிரியங்கா - 076 544 1517






**உங்கள் கேட்டல் தொடர்பான பிரச்சனைகளுக்குரிய உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

கேட்டல் விஞ்ஞானம் மற்றும் கேட்டல் கருவிகள் சம்பந்தமான துறையில் பல வருட அனுபவமுள்ள செவிப்புலனியலாளரை தனிப்பட்ட முறையில் சந்தித்து உங்கள் கேட்டல் மற்றும் கேட்டல் கருவி தொடர்பான பிரச்சனைகளுக்குரிய ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.



விஜயஷாந்த்
கேட்டல் புலன் மற்றும் கேட்டல் புலன் கருவி நிபுணர்



யசித் அருணஷாந்த
கேட்டல் புலன் மற்றும் கேட்டல் புலன் கருவி நிபுணர்

26 செவ்வாய்க்கிழமை - காலி | 27 புதன்கிழமை - பாணந்துறை | 28 வியாழக்கிழமை - கண்டி
29 வெள்ளிக்கிழமை - மாலபே | 30 சனிக்கிழமை - யாழ்ப்பாணம் | 01 ஞாயிற்றுக்கிழமை - வோட் பிளேஸ்

இந்நிகழ்வில் பங்குபற்றும் உங்களுக்கு
பூரண கேட்டல் புலன் பரிசோதனை மற்றும் கேட்டல் புலன் கருவி மற்றும் இதர உபகரணங்களுக்கு
விசேட விலைக்கழிவு

அழையுங்கள்
பிரியங்கா - 076 544 1517

VISION CARE HEARING SOLUTIONS 10 years

விஷன் கெயா ஒப்டிகல்ஸ் சேவிசஸ் வரை தனியார் நிறுவனம்
இல. 06, வோட் பிளேஸ், கொழு. 07
www.ear.lk

# 500 ரூபா உதவித் தொகையுடன் யாழில் இலவச தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மேசன் மற்றும் மரவேலை தொழிற் பயிற்சியானது 120 நாட்கள் பயிற்சி நெறியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்பவர்களுக்கு நாளொன்றிற்கு 500 ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும்.

இப்பயிற்சியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவை மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு 077 766 4689 என்ற தொலைபேசி இலக்கத்து டன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-5)

# பரிசில்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய ரீதியில் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இத் தினத்தையொட்டி மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் நோக்குடன் பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாற்றுத்திறனாளிகளுக்காகப் பணியாற்றி வருகின்ற கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் வருடம் தோறும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப் போட்டிகளை நடத்தி வருகின்றது. 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகளை கருவி நிறுவனம் வெளியிட்டது.

மாணவர்களுக்கான பிரிவில் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தினை றிச்சாட்வேக்மன் சண்றிசன் (தரம் 6,யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தினை யோகரட்ணம் பானுஷியன் (தரம்-13,யா/மத்திய கல்லூரி),இரண்டாம் இடத்தினை உ.தர்மிளா (தரம்-11,யா/இணுவில் இந்துக் கல்லூரி), மூன்றாம் இடத்தினை தயாபரன் ஹஜீதன் (தரம்-4, யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்) ஆகியோர் பெற்றுள்ளனர்.

பொதுமக்களுக்கான பிரிவில் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தினை செங்கதிர்ச் செல்வன் சேந்தன் (185/1,கண்டி வீதி, சாவகச்சேரி), இரண்டாம் இடத்தினை ஆன்றிசா றிச்சட்வேக் மன் (10 ம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு), மூன்றாம் இடத்தினை யோகேஸ்வரன் ஜெயரூபினி (நாவலடி,ஹாட்லிக் கல்லூரி விடுதி வீதி,புலோலி மத்தி, பருத்தித்துறை), கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தினை திருமதி ஆரணி முகுந்தன் (30,நீர்வேலி வடக்கு,நீர்வேலி), இரண்டாம் இடத்தினை இ. நவனிதன் (பிள்ளையார் கோயில் வீதி, சித்தாண்டி 1,மட்டக்களப்பு), மூன்றாம் இடத்தினை திருமதி பவானி மதியாபரணம் (அருனீச்சரம் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்). சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தினை நடராசா கண்ணதாஸ் (6 ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை), இரண்டாம் இடத்தினை வ.செல்வம் (விக்னேஸ்வரா வீதி, சங்கானை), மூன்றாம் இடத்தினை புவித்திரா தேவராசா (இல:85,புகையிரத நிலைய வீதி, வைரவப் புளியங்குளம்,வவுனியா), ஓவியப் போட்டியில் முதலாம் இடத்தினை யோகரட்ணம் பானுசியா (53,5வது ஒழுங்கை, கந்தர்மடம்,யாழ்ப்பாணம்), இரண்டாம் இடத்தினை சுகர்ணா கஜப்பிரியன் (அளவோடை மத்தி, இணுவில் மேற்கு, இணுவில்), மூன்றாம் இடத்தினை பா. கிருஷ்ணாம்பாள் (இணுவில் மேற்கு, இணுவில்) ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வலி.தென்மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ள கருவியின் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளன எனவும் இது தொடர்பான மேலதிக விபரங்களை 021 205 4224, 076 638 5563 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கருவி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ

# கனவுகளும் பலன்களும்

## கனவுகளில் ஐம்பூதங்கள்

*நிலம்:*

வீடு அல்லது நிலம் வாங்குவது போலக் கனவு கண்டால் திருமணம் நடக்கும். அதனால் புதிய சொத்துக்கள் வந்து சேரும்.

வயலில் பயிர்கள் நன்கு வளர்ந்து காய்த்துக் குலுங்குவது போலக் கனவு கண்டால் குடும்பத்தில் வசதி பெருகும். நிலத்தை உழும் காட்சியைக் கண் டால் பெரிய மனிதர்களின் சந்திப்பும் அதனால் செல்வாக்கும் உண்டாகும்.

பூந்தோட்டங்கள், பழத் தோட்டங்கள் ஆகியவற்றைக் கனவில் கண்டால் வசதியான வாழ்க்கை உண்டாகும். பூகம்பத்தைக் கனவில் கண்டால் தீங்குகள் ஏற்படும்., பொருளாதாரம் பாதிக்கப்படும். தொழிலில் நட்டம் ஏற்படும்.

நிலம் இரண்டாகப் பிளவுபடுவது போலக் கனவு கண்டால் குடும்பத்தில் பிரிவு அல்லது பாகப் பிரிவினை ஏற்படும். ஆதரிப்பவர்கள் எதிராகச் செயற்படுவார்கள்.

பாழடைந்த நிலம் அல்லது மேட்டு நிலத்தைக் காண்பது தீமையான பலன்களைத் தரும். பாலைவனத்தைக் கனவில் கண்டால் சோதனைகள் உண்டாகும். திட்டங்கள் தோல்வி அடைந்து கானல் நீர் போல் ஆகிவிடும்.

மலையைக் கனவில் கண்டால் தடங்கல்கள் ஏற்படும். மலை மேலே ஏறுவது போலக் கனவு கண்டால் கடுமையான முயற்சிக்குப் பின்னரே வெற்றி கிடைக்கும். மலையில் ஏறும் போது விழுந்து விடுவது போலக் கண்டால் கெட்ட பலன்கள் ஏற்படும்.

சக்தியில் கால் படுவது போலக் கனவு கண்டால் தவறான காரியங்களால் அவப்பெயர் உண்டாகும்.

புதை மணலில் சிக்கிக் கொள்வது போலக் கனவு கண்டால் முறையற்ற தொடர்புகள் காரணமாக இழப்புகள் ஏற்படும்.

புதை மணலில் சிக்கிக் கொண்டவரைக் காப்பாற்றுவது போலக் கனவு கண்டால் பிறருடைய தவறான காரியங்களுக்கு உடந்தையாக இருந்து அதனால் சங்கடங்களில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

நிலத்திற்கு எரு இடுவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் நன்மை ஏற்படப் போகிறது என்று பொருள். காட்டில் இருப்பது போலக் கனவு க்ண்டால் வாழ்க்கையில் மேன்மையும் சுதந்திரமும் ஏற்படும். புத்திர பாக்கியமும் ஏற்படலாம். காட்டில் கஷ்டப்படுவது போலவோ அல்லது பாதை தெரியாமல் தவிப்பது போலவோ கனவு கண்டால் பலவித கஷ்டங்களுக்கு ஆளாக நேரும்.

# "இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஊடகங்களின் பங்களிப்பு" ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் "இந்துக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஊடகங்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பிலான ஆய்வரங்கு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்து சமய பேரவைத் தலைமைச் செயலகத்தில் இந்து சமயப் பேரவைத் தலைவர் ஈசான ஸ்ரீ.சக்திகிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆய்வாளர்களாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, காலைக்கதிர் பத்திரிகை ஆசிரியர் ந.வித்தியாதரன், இந்துக் குரல் 'ஆசிரியர் யோ.துஷ்யந்தன், டான் தொலைக்காட்சி நிகழ்ச்சிப் பணிப்பாளர் த.இராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# பாடசாலையின் பரிசுத்தினம் இன்று

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசுத்தினம் இன்று 27ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் மாலதி சுப்பிரமணியம் அரங்கில் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் இடம் பெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் பிரான்பற்றில் அமைந்துள்ள மார்க்கண்டு சுவாமிகள் சபை மண்டபத்தில் சமாதான நீதவான் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக விவசாய சம்மேளனத் தலைவர் ச.இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# இராசி பலன்

27.11.2019

கார்த்திகை 11, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

பிரதமை முன்னிரவு 8.32 மணிவரை

அனுசம் முற்பகல் 9.51 மணிவரை

சுபநேரம் 4.42-6.12 மணிவரை

இராகுகாலம் 12.12-1.42 மணிவரை

அமிர்த சித்தம்

வளவன்

கிரகநிலை: ராகு; சனி, கேது, குரு, சுக்; சந், சூரி; புத, செவ்

சந்திராஷ்டமம்: பரணி

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழிலில் ஆர்வம் கூடும், நிதானத்துடன் நடந்து முன்னேற்றம் பெற வேண்டிய நாள், போசன சுகமுண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செய் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கடகம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எதிர்பார்ாத நன்மைகள் இடம்பெறலாம்,ரோக பயமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் இடம்பெறலாம், கற்பனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**கன்னி:** உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெறுமையால் காண வேண்டிய நாள், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்:** செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், நண்பர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் பெருக வழிவகை செய்வீர்கள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அலைய வேண்டி வரலாம், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மகரம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கும்பம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பிறர் உதவியுண்டு, போசன நன்மையுண்டு.

**மீனம்:** பயணங்களால் பலனுண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

## தனியாள் நிதி-திட்டமிடல்
### நிகழ்கால மற்றும் எதிர்கால நிதி - மேலாண்மைக்கான ஓர் அங்கீகாரம்

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 - 11.30 மணி வரை,
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையில், கே.கே.எஸ் வீதி.
பதிவுக்கட்டணம் Rs.500.00
**அழையுங்கள்: 021 222 1455, 077 782 2014 (stock & send sms)**

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்
(C-8337)



## உதவியாளர் தேவை

வடமராட்சியில் உள்ள பிரபல மருந்தகம் ஒன்றில் பணிபுரியக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் மருந்தக உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு:
077 863 5650, 076 991 7453
(C-8338)


## வாசிப்புமாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அளவெட்டி கலாசார மண்டபத்தில் வலி.வடக்கு பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், கௌரவ விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன், வலி.வடக்கு பிரதேச சபை சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. செ.சிவயோகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## வேலணை பிரதேச சபை
## முன்பள்ளி மாணவர்களை பதிவு செய்தல்-2020

*எமது சபையினால் 2020 ஆம் ஆண்டிற்கு புதிதாக முன்பள்ளிகளை வேலணை உப அலுவலகத்தின் கீழ் பொதுநூலக கட்டடத்திலும் புங்குடுதீவு உப அலுவலகத்தின் கீழ் புங்குடுதீவு உப அலுவலக கட்டடத்திலும் ஆரம் பிக்கப்படவுள்ளதால் விண்ணப்பப்படிவங்களை அந்தந்த உப அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 20.12.2019 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.*

*மேலதிக விபரங்களுக்கு 021 221 1506 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.*

**திரு.ந.கருணாகரமூர்த்தி,**
**தவிசாளர்,**
**பிரதேச சபை, வேலணை.**
(C-8328)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4 செவ் 2 இல்<br>உயரம்: 5'10''<br>தகைமை/தொழில்:O/L, Canada<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/10295 | பிறப்பு: 1978 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'2''<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/6605 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 46 செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L, சொந்த தொழில்<br>தொ.இ: B/10296 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 24<br>உயரம்: 5'4''<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6613 |
| பிறப்பு: 1976 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'7''<br>தகைமை/தொழில்: Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/10297 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்:MBBS, Doctor, Singapore<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/6619 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 30 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'3''<br>தகைமை/தொழில்: B.Sc, Architect<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, B.Sc பட்டதாரி<br>தொ.இ: B/10298 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'2''<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6644 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிட்ஸ்பார்க் முன்பள்ளியின் கல்விக் கண்காட்சி நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் முன்பள்ளி மண்டபத்தில், முன்பள்ளி நிர்வாகக் குழுத் தலைவர் ஆர். சேதுநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். சிவதாஸ், கௌரவ விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கலை அரசன், வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ் கிருபானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## பணி நிறைவு வாழ்த்து

**திரு.வேலாயுதம் அருளானந்தம் ஞானேந்திரன்**
Dip.in.Sci, Dip.in.Ed.
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி



**ஓயாது உழைத்து**
**எமைச் சாயாது காத்த**
**தந்தையே**
**உங்கள் ஓய்வுக்காலம்**
**உங்களுக்கு**
**சிறப்பானதாக**
**அமையட்டும்**

(1198)
வாழ்த்துவோர்:
மனைவி,பிள்ளைகள், நேசராசா, வசந்தராசா, சயந்தராணி, ஜெயராசா

## யாழ்.நல்லூர் தெற்கு
## ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

**சிறுவர் பூங்கா திறப்பு விழாவும்**
**பரிசில் தினமும் -2019**

# அழைப்பிதழ்

**இடம் : வித்தியாலய பிரதான மண்டபம்**
**காலம் : 27.11.2019 (புதன்கிழமை)**
**நேரம் : காலை 9.00 மணி**

தலைவர்
**திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன்**
(பாடசாலை முதல்வர்)

பிரதம விருந்தினர்
**கௌரவ மாவை சோ.சேனாதிராஜா**
(பாராளுமன்ற உறுப்பினர், இலங்கை தமிழரசுக்கட்சி)

சிறப்பு விருந்தினர்கள்
**திரு.இமானுவல் ஆனல்ட்**
(முதல்வர், யாழ்.மாநகரசபை)

**திரு.சூடாமணி அகிலன்**
(கணக்காளர், யாழ்.பிரதேச செயலகம்)

கௌரவ விருந்தினர்கள்
**திரு.து.ஈசன்**
(உதவி முதல்வர் - யாழ்.மாநகரசபை)

**திரு.அ.கிருபாகரன்**
(முதல்வர், கிருபாலேணர்ஸ் பயிற்சிப் பாடசாலை)

**திரு.விநாயகமூர்த்தி சுகுமாரன்**
(மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
வித்தியாலய குடும்பத்தினர்.


விளம்பர அனுசரணை
**ஆசீர் வணிக நிலையம்**
202, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.இல: 021 222 5485
(C-8327)

# பொலிஸாரின் ஏற்பாட்டில் சிரமதானப்பணி முன்னெடுப்பு



(மன்னார்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நகர அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு அமைய "மனிதர் நேசிக்கும் சுகாதாரமிக்க சுற்றாடலை உருவாக்குவோம்" எனும் கருப் பொருளில் பொலிஸாரின் ஏற்பாட்டில் சிரமதான நிகழ்வு நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் குறித்த நிகழ்வு நேற்று மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் நகர்ப் பகுதிகளில் இடம்பெற்றது.

குறித்த சிரமதான நிகழ்வில் நகர சபை, பொதுச்சுகாதார பரிசோதகர்கள், வர்த்தக சங்கம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாய பொலிஸ் குழு பிரதிநிதிகள்கலந்துகொண்டனர்.(9-250-285)

# இன்று வீடுகளில் நெய்விளக்கு ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துங்கள்

## வவு.மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை

(வவுனியா)

தமிழ் மக்கள் தமது முடிக்குரிய ஆட்சி நிலத்தை பாதுகாத்துக் கொள்ளவும் அந்த நிலத்தில் தங்களுக்கே உரித்தான மொழி, கலை, கலாசாரம் மரபுரிமைகளை நிலை நிறுத்திக் கொள்ளவும், "தமிழீழத் தனியரசு" ஒன்றை நிறுவுவோம் எனும் உன்னதமான இலட்சிய வேட்கையோடு களமாடி, சந்தனப்பேழைகளாகத் துயில்கொள்ளும் தமிழ்த் தேசிய இனத்தின் வீர ஆத்மாக்களை அஞ்சலிக்கும் புனித நாள் இன்று.

அந்தவகையில் மாவீரர் நாள் எழுச்சி நினைவேந்தல், இன்று வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாவீரர்களுக்காக பிரத்தியேகமாக அமைக்கப்படும் திருக்கோவிலில் ஆலய மணியோசை மூன்று முறை ஒலிக்க விடப்பட்டு, உறுதியுரை கீதம் இசைக்க மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு மாதிரிக் கல்லறைகளுக்கு முன்பாக பொதுச்சுடர் ஏற்றலுடன் மண்டப நிகழ்ச்சியாக இடம்பெறும்.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்படாத நிலைமையில், வவுனியா நகரத்தில் இடம்பெறும் குறித்த நினைவேந்தல் எழுச்சியில், வவுனியா மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில், வித்துடல்களாக விதைக்கப்பட்டுள்ள மற்றும் நடுகற்களாக திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின், பெற்றோர்கள் - உறவினர்கள் - நண்பர்கள் - உரித்துடையவர்களும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் கலந்து கொண்டு மாவீரத் தெய்வங்களை விசுவாசமாகவும் - நன்றியுணர்வாகவும் நினைந்துருகி அஞ்சலித்து வீரவணக்கம் செலுத்துமாறும் தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து நினைவேந்தல் இடம்பெறும் கிட்டிய தூரத்திலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு முடிந்தவரை நேரில் வருகை தருமாறும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால் கலந்துகொள்ள முடியாதவர்கள், இன்று மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு தத்தமது இல்லங்களின் வாசல்கள் தோறும் நெய் விளக்கேற்றி மண்ணுறங்கும் மாவீர ஆத்மாக்களை அஞ்சலித்து மதிப்பு றுத்தும்தேசிய பெரும்பணியை - தேசியக் கடமையை, தரம் தாழ்ந்து போகாது சிரம் உயர்த்தி நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (9-299)




# பாடசாலைகளில் தேங்கும் வெள்ளநீரினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## கிளி.பாடசாலைகளுக்கு சுகாதாரத்துறை அறிவிப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கும் பாடசாலைகளில் இருந்து வெள்ளத்தினை வடிந்தோடுவதற்கான வசதிகளை பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பெற்றோர்களும் மேற்கொள்ள வேண்டும் என சுகாதாரத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைச் சூழலில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் டெங்கு போன்ற அபாய நோய்கள் ஏற்படும். அத்துடன் மாணவர்கள் ஈரப் பாதணிகளுடன் வகுப்பறைகளில் இருப்பதன் காரணமாக காய்ச்சல் ஏற்படுவதற்கான நிலைமை காணப்படுகின்றது.

எனவே பெற்றோர்கள் பாடசாலை வளாகத்தில் இருந்து மழை வெள்ளம் வடிந்தோடுவதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் தேங்கி நிற்கும் வெள்ள நீரில் மாணவர்கள் விளையாடுவதன் காரணமாக நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகி உள்ளன.

அத்துடன் பாடசாலை கிணறுகளில் வெள்ள நீர் கலக்கின்றதா? என்பதை பாடசாலை நிர்வாகம் அவதானித்து சுகாதாரத் திணைக்களத்திற்கு அறிவித்து உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(9-350)

# மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு





(பரந்தன்)

தமிழ் இனத்தின் விடுதலைக்காக உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி தருமபுரம் பிரதேசத்தில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா தலைமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பொது உருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மாவீரர்கள் நினைவாக மரக்கன்றுகளும் சிறு நினைவுப் பொருளும் வழங்கி வைக்கப்பட்டது. (9-312-316)

# நாவன்மை போட்டி முடிவுகள்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் வருடாந்தம் நடத்தும் திருவள்ளுவர் விழாவையொட்டி இவ்வாண்டும் கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான நாவன்மைப் போட்டி நடத்தப்பட்டு போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போட்டியில் பூநகரி, கண்டாவளை, கரைச்சி பச்சிலைப்பள்ளி கோட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

குறித்த போட்டி முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அந்த வகையில், பிரிவு-ஊ (02, 03) (முதலாம் இடம் இருவர்) அகிலன் அருணவி (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), ஜெயக்குமார் கிசானா (கிளி/ இராமநாதபுரம் உ.நி.ப.), இரண்டாம் இடம் றயீவன் சுமீரா (கிளி/இராமநாதபுரம் உ.நி.ப.), மூன்றாமிடம் ரூபன் டர்மிகா (கிளி/ தருமபுரம் எண் - 01 அ.த.க.ப.), பிரிவு - உ (04, 05) முதலாம் இடம் சுரேசுகுமார் லாவண்யா (கிளி/ இராமநாதபுரம் உ.நி.ப.), இரண்டாம் இடம் மயூரன் சரண்யா (கிளி/ தருமபுரம் எண் - 01 அ.த. க.ப.), மூன்றாமிடம் அந்தோனி செபக்குமார் ஆன் நிலுசா (கிளி/இராமநாதபுரம் உ.நி.ப.), பிரிவு - ஆ (10, 11) முதலாம் இடம் பாசுகரன் சாரங்கன் (கிளி/ பளை மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் யோகநாதன் பவனிகா (கிளி/பரந்தன் இந்து உ.நி.ப.), (மூன்றாமிடம் இருவர்) கருணாகரன் அபிநயன் (கிளி/ கிளிநொச்சி மத்திய உ.நி.ப.), கணேசலிங்கம் ரூபிதா (கிளி/ உருத்திரபுரம் உ.நி.ப.), பிரிவு - அ (12, 13), முதலாம் இடம் நகுரகுமார் அபிராமி (கிளி/ கிளிநொச்சி உ.நி.ப.) (9-84)

# திறன் வகுப்பறை திறப்பு





(மன்னார்)

வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப்பாடசாலையில் திறன் வகுப்பறை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை கட்டடத்தை வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா திறந்து வைத்தார். அத்துடன் இவ்வாண்டு கோட்ட, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட ங்களில் சாதித்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் தியாகசோதி யுவராஜா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக்கல்வி பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், கௌரவ விருந்தினராக வவுனியா தெற்கு ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.முரளிதரன் மற்றும் விருந்தினர்களாக அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-250)



நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எ. லக்ருவானின் ஏற்பாட்டில் நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவர்களுக்கு 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த மாணவர்களுக்கே குறித்த உதவிகள் வழங்கி வைக் கப்பட்டன. பாடசாலையின் அதிபர் செ.பவேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் மல்வலகே, தொழிலதிபர் ரூபினி மெதகே, விவ்சாய போதனாசிரியர் லக்ஷ்மன் குமாரஸ்ரீ, நெடுங்கேணி பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் கே.டி. லக்மால் மற்றும் பாட சாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் கலந்து கொண்டனர். (படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இவ்வுலக வாழ்வில்
04
01
1929

முடிவில்லா நித்திய வாழ்வில்
27
11
2018

அமரர்.திரு.

## கிங்சிலி இம்மானுவேல் பெனடிக்ற்

உங்களை வீட்டுப் பிரிந்து ஓராண்டுகள் ஆனது
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும் நினைவுகளால்
எம்முடனே வாழ்ந்து கொண்டிருக்கிறீர்
தந்தை என்ற சொல்லுக்கு உதாரணமாக இவ்வுலகில் நீர் வாழ்ந்தீர்
உண்மையான அன்பு பாசத்தை உம்மிடமே கற்றுக் கொண்டோம்
நீர் என்றென்றும் எம்முடனே வாழ்ந்து கொண்டிருப்பீர்

(1180)

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

என்றும் உங்கள் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
அன்பு மகன்: அன்ரன் துஜீவ் கண்ணா பெனடிக்ற்.

# விண்ணக வாழ்வில் 31ஆம் நாள்



அமரர்

## முருகேசு அற்புதம்

தோற்றம்
02.03.1948

மறைவு
28.10.2019

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்.
ஓட்டத்தை முடித்துவிட்டேன்.
விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். 2 திமொ 4:7

இரக்கத்தின் ஆண்டவரே! இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு உம்மிடம் வந்த எம் அன்னைக்காக உம்மிடம் வேண்டுகின்றோம். இவர் உமக்கெதிராகச் செய்த அனைத்துக் குற்றங்களையும் மன்னித்து; உமது வான் வீட்டில் சேர்த்தருளுமாறு இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்.

**எமது அன்னையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 27.11.2019 இன்று காலை 6.30 மணிக்கு, துன்னாலை சதாசகாய அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியிலும், எமது வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.**

மாதா கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி.

குடும்பத்தினர்.

(C-8333)

# 1 ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சோமசுந்தரம் சிவராசா

திதி:கார்த்திகை பூர்வ பக்க பிரதமை, 2019.11.27



பிறப்பு
1953
03
30

இறப்பு
2018
12
07

**கண்மூடித் திறக்கையிலே ஆண்டொன்று ஆனதையா
உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில் ஆறுதல்
பெற என்றும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(1205)


18/5, பிரம்படிலேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திரு.செல்லத்துரை தெய்வேந்திரன்

**(ஓய்வுநிலை கணக்காளர், நீர்வேலி, ப.நோ.கூ.சங்கம்)**



இராதம்பு, கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தெய்வேந்திரன் 25.11.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி- பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசீலாதேவியின் அன்புக் கணவரும் விதூர்சன் (கொமர்ஷல் வங்கி, திருநெல்வேலி), ஹர்சன் (மக்கள் வங்கி, நெல்லியடி), முகுந்தன் (மக்கள் வங்கி, மாங்குளம்), யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சிந்துஜா (மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகேந்திரன் (ஜேர்மன்), புவனேந்திரன் (ஜேர்மன்), புஸ்பராணி (U.K), ஜெயராணி (ஜேர்மன்), மோகனராணி (ஜேர்மன்), பேரின்பராணி (ஜேர்மன்), நாகநாதன் (ஜேர்மன்), சாந்தராணி (ஜேர்மன்), லோகச்சந்திரன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காஞ்சனாதேவி (ஜேர்மன்), வசந்தா தேவி (ஜேர்மன்), யோகநாதன் (U.K), விக்னராஜா (ஜேர்மன்), பிரேமராஜா (ஜேர்மன்), ஜெகமலர் (ஜேர்மன்), பத்மகுமாரி (ஜேர்மன்), அஞ்சலை (U.K), காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் சரவணமுத்து (கனடா), காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் தையல்நாயகி (Canada) பொன்னம்பலம், சரஸ்வதிதேவி, பத்மாதேவி, புஸ்பதேவி, விஸ்வநாதன் ஆகியோரின் மைத்துனரும் விதுன், யாகவி, தக்ஸ்வின் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.11.2019 புதன்கிழமை பிற்பகல் 01 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தன்காடு இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

"அன்னை இல்லம்" MPCS லேன்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 452 8842, 077 869 3037

(1192)




# மாவீரர் தின ஏற்பாடுகள் பூர்த்தி

(முல்லைத்தீவு)

தமிழ் இனத்தின் விடிவுக்காக தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் வகையில் தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இம்முறை தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மற்றும் முழங்காவில் துயிலுமில்லங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், முள்ளியவளை, அளம்பில், முள்ளிவாய்க்கால், இரணைப்பாலை, தேராவில், தேவிபுரம், களிக்காடு, இரட்டைவாய்க்கால், பச்சைப்புல்மோட்டை ஆகிய துயிலுமில்லங்களிலும், மன்னார் மாவட்டத்தில் பண்டிவிரிச்சான், ஆட்காட்டிவெளி ஆகிய துயிலுமில்லங்களிலும் வவுனியா மாவட்டத்தில் நகரசபை மண்டபம் மற்றும் ஈச்சங்குளம் பகுதியிலும் மாவீரர் தின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இன்று மாலை 6.05 மணிக்கு தமிழர் தாயகம் எங்கும் மாவீரர்களுக்கு உணர் வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்துவதற்காக பொதுமக்கள் தயாராகி வருகின்றனர். (9-100-281-285-299)

# மாவீரர்களின் கொள்கை வழியில் தமிழர்கள் ஒன்றாகப் பயணிக்க வேண்டும்

(கிளிநொச்சி)

**இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்துக்காக மாவீரர்களின் கொள்கைப் பற்றோடும் இலட்சிய உறுதியோடும் தமிழர்கள் அனைவரும் ஒன்றாக பயணிப்போம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**



அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில், மாவீரர் நாள் என்பது வெறுமனே மரணித்தவர்களை நினைவுகூரும் சாதாரண நாள் அல்ல. தாயக விடுதலையை தம் உயிரினும் மேலாக நேசித்து அந்த இலட்சியத்துக்காக போராடி மடிந்த எமது தேசத்தின் விடுதலை வீரர்களை நெஞ்சிருத்தி அஞ்சலிக்கும் புனிதநாள்.

இந்த நாளை தியாகிகளின் திருநாளாகவும், தேசத்தின் பெருநாளாகவும், எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகவுமே உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலித்து வருகிறார்கள்.

தாயக தேசத்தின் விடுதலைக்காக களமாடிய புலி வீரர்கள் உயிரற்ற சடலங்களாக மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே இன்றும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழீழம் என்ற சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தையாக பிறப்பெடுக்க வேண்டும் என்ற பேரவாவிலேயே அத்தனை தனிமனித உயிர்களும் சரித்திரக் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் அனைத்தும் கருவாகி, காலத்தால் உருவம் பெற்று, என்றோ ஓர் நாள் தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெறவேண்டும் என்பதே ஒவ்வொரு தமிழர்களதும் ஆத்மார்த்தமான எதிர்பார்ப்பு.

ஒருநாட்டின் முழுப் படைபலத்தையும், ஆயுதபலத்தையும், தேசியவளத்தையும் ஒன்று திரட்டி பயன்படுத்தி பழைமையும், புதுமையும் வாய்ந்த எமது பாரம்பரிய பூமியை தகர்த்து, அதன் பொருள் வளத்தையும், பண்பாட்டுச் சின்னங்களையும் சிதைத்து, தமிழர்களின் தேசிய வாழ்வை சீர்குலைத்து விடுவதற்காக 'புலிகள் தான் தமிழர், தமிழர் தான் புலிகள்' என்ற வரலாற்று உண்மையை மறந்து புலிகளுக்கெதிராக என்ற பெயரில் தமிழருக்கெதிராக விஸ்வரூப பரிமாணம் பெற்றிருந்த இன அழிப்புப் போரில் மனித ஈகத்தின் உச்சங்களையெல்லாம் கடந்து நிற்பது மாவீரர்களின் தியாகங்களே!

தேசிய எழுச்சிக்கு மூச்சாகி நின்ற மாவீரச்செல்வங்களின் ஈகம் ஈழவிடுதலைக் காவியத்தின் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் நெருப்பு வரிகளால் எழுதப்பட வேண்டியது.

புலிகள் எப்போதும் போரை விரும்பியவர்களோ, அகிம்சையை வெறுத்தவர்களோ அல்ல. அவர்கள் விடுதலை என்ற இலட்சியத்தை இலகுவாக தேர்ந்தெடுக்கவில்லை. வரலாறு தான் அதைக் கட்டாயமாக அவர்களிடம் கையளித்தது. சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வரலாறு எமக்கு வேறுவழிகள் எதனையும் விட்டு வைக்கவில்லை என்பதை தமிழினத்தலைவர் பிரபாகரன் அடிக்கடி சொல்லிக் கொள்வதுண்டு. ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத்தாண்டவமே விடுதலைப் பாதையில் புலிகளை தள்ளி விட்டது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நாம் முயற்சிப்பதும், பேரினவாதகட்சிகள் அதை எதிர்ப்பதுமான சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக நடந்து கொண்டே இருக்கிறது.

தமிழர்களைப் பகடைக்காய்களாக்கி ஆடப்பட்டுவரும் இந்த சதுரங்க விளையாட்டின் எதிர்விளை வாக அன்று முதல் இன்று வரை எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டும், கூட காலத்தால் மோசமாகித் தொடரும் தமிழரின் அவலவாழ்வில் இன்று வரை அதே அரசியல் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை வேதனையளிக்கிறது.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்த வொரு சக்தியாலும் அசைக்க முடியாது' என்ற தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் சிந்தனையை உண்மையாக்கும் இன்றைய புனிதம் நிறைந்த புனிதர்களின் நாளை எமது இதயங்களில் பதித்து 'இனவிடுதலை' என்ற சத்திய இலட்சியத்திற்காக கொள்கைப்பற்றோடும், இலட்சிய உறுதியோடும் இறுதி வரை பயணிப்போம் என்று மாவீரத் தெய்வங்களின் மீது ஒவ்வொரு தமிழர்களும் உறுதியெடுத்துக் கொள்வோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவத்தினர் அடாவடி



(மன்னார்)

வடக்கு-கிழக்கு பகுதிகள் முழுவதும் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் தினத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தற்காலிக நினைவு தூபி மற்றும் நினைவு கற்கள் அனைத்தும் இராணுவத்தினரால் அகற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், தமிழர் தாயகப் பகுதிகளில் மாவீரர் தினத்திற்கு என மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்திலும் ஏற்பாட்டு பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மன்னார் பண்டிவிரிச்சான் துயிலும் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி மற்றும் கற்கள் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினரால் அகற்றப்பட்டுள்ளன.

அன்றைய தினம் மாவீரர் துயிலும் இல்லப் பகுதிகளில் அதிகளவிலான இராணுவ வீரர்கள் காணப்பட்டதாகவும் அதே நேரத்தில் இராணுவ வாகனங்களும் காணப்பட்டதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (9-285)

# வீடு புகுந்து தாக்குதல் கணவன், மனைவி படுகாயம்



(நெளுக்குளம்)

வவுனியா ஓயார் சின்னக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், இனந்தெரியாத நபர்கள் வீட்டு வளவினுள் புகுந்து வீட்டின் யன்னல், கதவு போன்றவற்றின் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன் வீட்டிலிருந்த இருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். கூக்குரல் சத்தத்தை கேட்டு அயலவர்கள் அவ்விடத்திற்கு வருவதனை அறிந்த குறித்த நபர்கள் தாம் அணிந்திருந்த பாதணியினை அவ்விடத்தில் விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்த கணவன்-மனைவி ஆகிய திருச்செல்வம் (வயது-73), கலா (வயது-60) இருவரும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-299)

# பூநகரிப் பிரதேச சபை

## பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2020

கீழ்க்குறிப்பிடப்படும் பிரதேசசபை எல்லைப் பரப்பிற்குட்பட்ட இடங்களிற்கு உட்பட்ட பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2020ஆம் ஆண்டிற்காக 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- மீள் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 27.11.2019 தொடக்கம் 12.12.2019 வரை காலம் மு.ப.8.30 -பி.ப 3.30 வரை
- மீள் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 12.12.2019 மதியம் 12.00 மணி வரை
- மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 12.12.2019 பி.ப 12.30 மணி

**மீள் கேள்வி நிபந்தனைகள்:**

1.மீள் கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர் பிரதேசசபை, பூநகரி எனும் முகவரிக்கு அரச முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் 12.12.2019ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

2.கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புபவர்கள் பிரதேச கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் தேசிய அடையாள அட்டையினை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.

3.கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் மீள் கேள்வி வைப்புப்பணத்தினையும் செலுத்த வேண்டும்.

4.உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவரிற்கும் படிவம் வழங்கப்படமாட்டாது.

5.கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் நாளன்று கேள்வியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

6.மீள் கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தலிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளினை நிராகரிக்கின்ற அதிகாரம் கேள்விச்சபைத் தலைவரிற்கு உண்டு.

7.இற்றச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும்.குத்தகைக்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடாத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.

8.அரச கால்நடை வைத்திய நிலையத்தால் காதில் பட்டியிடப்பட்ட மாடுகள் மட்டும் வெட்ட அனுமதிக்கப்படும்.

9.எம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்படவேண்டும்.

10.இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படமுன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்ட திட்டங்களிற்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.

11.தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பங்கினை 18.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையோடு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

12.பெறுகைக்குழு கேள்வியை ஏற்றுக்கொள்வது அல்லது பகுதியாக ஏற்றுக்கொள்வது அல்லது நிராதரிப்பது பெறுகைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டது ஆகும். கேள்விக் குட்படுத்தலாகாது.

**2020 ஆம் ஆண்டுக்கான பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகளிற்கான கேள்வி கோரல்**

| தொ.இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| பொதுச்சந்தைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5000.00 | 30800.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3000.00 | 9680.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5000.00 | 52800.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 35200.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 13200.00 |
| 4 | 19 ம் கட்டை | 500.00 | 3000.00 | 22000.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 8500.00 | 306354.4 |
| மாட்டிறைச்சிக்கடைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 1000.00 | 8000.00 | 36080.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 8500.00 | 278264.98 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8000.00 | 22000.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3000.00 | 48400.00 |
| 3 | 19 ம் கட்டை | 1000.00 | 5000.00 | 228800.00 |
| 4 | வலைப்பாடு | 1000.00 | 5000.00 | 84520.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 1000.00 | 10500.00 | 528880.00 |
| கோழியிறைச்சிக்கடைகள் | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 75680.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 3000.00 | 14080.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 8800.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 4488.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 8888.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 500.00 | 3000.00 | 179520.00 |
| ஆட்டிறைச்சிக்கடை | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 4400.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 4400.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 4400.00 |
| 2 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 4400.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி | 500.00 | 3000.00 | 4400.00 |
| கருவாட்டுக்கடை | | | | |
| பூநகரி உப அலுவலகம் | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 8800.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 8800.00 |
| பல்லவராயன்கட்டு உப அலுவலகம் | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 8800.00 |
| இரணை தீவு உப அலுவலகம் | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல - 01 | 500.00 | 3000.00 | 8800.00 |
| 2 | நாச்சிக்குடா சந்திஇல - 02 | 500.00 | 3000.00 | 8800.00 |

**அருணாசலம் ஐயம்பிள்ளை, தவிசாளர், பிரதேசசபை, பூநகரி.** (C-8341)

# அரச நிறுவன பிரதானிகளைத் தெரிவு செய்ய லலித் வீரதுங்க தலைமையில் விசேட குழு

## ஜனாதிபதி கோட்டாபயவால் நியமனம்



(கொழும்பு)

அரச நிறுவனங்களின் பிரதானிகள், பணிப்பாளர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக விசேட குழுவொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது. நால்வர் கொண்ட விசேட குழுவொன்றே இவ்வாறு நியமிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கீழ், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் நாலக கொடஹேவா, ஜோன் கீல்ஸ் குழுமத்தின் முன்னாள் தலைவர் சுசந்த ரத்நாயக்க மற்றும் மாஸ் ஹோல்டிங்ஸ்குழுமத்தின் முன்னாள் தலைவர் டயன் கோமஸ் ஆகியோரே இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். கடந்த வாரம், புதிய அமைச்சரவை பொறுப்பேற்றபோது, அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஊழல் மோசடிகளுடன் தொடர்பற்ற தகுதியானவர்கள் நியமிக்கப்படுவர் எனவும் அவர்களைத் தெரிவு செய்ய விசேட குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர்கள் தமக்கு நிறுவனங்களுக்கான உறுப்பினர்களின் பெயர்களை அக்குழுவுக்கு சிபாரிசு செய்ய முடியும் எனவும் அதிலிருந்து தகுதியானவரை குறித்த குழு முடிவு செய்யும் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார். அதன் பிரகாரமே தற்போது இந்த விசேட குழு நியமிக்கப்பட்டது. (இ-7)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றெங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 112 3471


Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(C-8325)

# பாரதம்

## விண்ணில் பாய்கிறது இந்தியாவின் பி.எஸ்.எல்.வி.சி.47 ரொக்கெட்



(டில்லி)

இந்தியாவின் கார்டோசாட் செயற்கைக்கோள் மற்றும் அமெரிக்காவின் 13 சிறிய ரக செயற்கைக்கோள்களைச் சுமந்தபடி, பி.எஸ்.எல்.வி.சி.47 ரொக்கெட் இன்று புதன்கிழமை விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

புவி கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புக் கண்காணிப்புக்கு இந்த கார்டோசாட்-3 செயற்கைக்கோள் உதவவுள்ளது.

ஆந்திர மாநிலம், ஸ்ரீஹரி கோட்டாவிலுள்ள சதீஷ் தவண் விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து, இன்று காலை 9.28 மணிக்கு ரொக்கெட் விண்ணில் ஏவப்படவுள்ளது.

மேலும் 1,625 கிலோ எடை கொண்ட இந்த மூன்றாம் தலைமுறை அதிநவீன கார்டோசாட்-3 செயற்கைக்கோள், புவியிலிருந்து 509 கி.மீ. தொலைவிலான சுற்று வட்டப் பாதையில் 97.5 கோணத்தில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

அங்கிருந்தபடி, புவியைக் கண்காணிப்பதுடன் உயர் தரத்திலான புகைப்படத்தை எடுத்தனுப்பும் திறன் கொண்டதாகும்.

குறிப்பாக வானில் மேகக் கூட்டங்களை ஊடுருவி புவியை தெளிவாகப் படம் பிடிக்கும் என்பதோடு, இரவு நேரத்திலும் புவியை மிகத் தெளிவாகப் படம் பிடித்து அனுப்பும் திறன் கொண்டது இந்த செயற்கைக்கோள்.

இது 5 ஆண்டுகள் செயற்பாட்டில் இருக்கும் எனவும் இஸ்ரோ தெரிவித்தது.

அமெரிக்காவின் 13 செயற்கைக்கோள்கள், இந்த கார்டோசாட்-3 செயற்கைக்கோளுடன் அமெரிக்காவுக்குச் சொந்தமான 13 சிறிய ரக செயற்கைக் கோள்களும் விண்ணில் ஏவப்படவுள்ளன. (ஜ-2)

## மும்பை கோர தாக்குதலின் நினைவு தினம் அனுஷ்டிப்பு



(டில்லி)

மஹாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடத்தப்பட்ட கோர தாக்குதலின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த தாக்குதலின் 11ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

இதையொட்டி தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு தலைவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டனர்.

இந்நிலையில் மும்பை தாக்குதலின் 11ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு மும்பையில் உள்ள பொலிஸ் நினைவிடத்தில் மாநில ஆளுநர் பகத் சிங் கோஷ்யாரி மற்றும் முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் மலர் வளையம்வைத்து மரியாதை செலுத்தினர்.

மஹாராஷ்டிரா மாநிலம் மும்பையில் மக்கள் நடமாட்டம் மிகுந்த முக்கியமான 8 இடங்களில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல்கள் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 166 பேர் உயிரிழந்தனர். 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ராஜீவ்காந்தி கொலை வழக்கு கைதி ராபர்ட் பயஸ் பரோலில் செல்ல அனுமதி



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு 28 ஆண்டுகளாக சிறையில் இருந்து வந்த ராபர்ட் பயஸ், தனது மகனின் திருமணத்திற்காக ஒரு மாதம் பரோலில் சென்றார்.

ராபர்ட்பயஸ் தனது மகன் தமிழ் கோவின் திருமண ஏற்பாடுகளை செய்ய பரோல் வழங்கக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்தார்.

குறித்த மனுவை நீதிபதிகளான சுந்தரேஷ், ஆர்.எம்.டி.டிக்காராமன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு உட்படுத்தியது.

இதன்போது விசாரணையின் நிறைவில் குறித்த அமர்வு தெரிவித்ததாவது, "ஊடகங்களுக்கு பேட்டி அளிக்கக்கூடாது. அரசியல் கட்சி தலைவர்களை சந்திக்கக்கூடாது என்பது உள்ளிட்ட நிபந்தனைகளுடன் நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 24ஆம் திகதி வரை ஒரு மாதம் பரோல் வழங்கி உத்தரவிட்டது.

இதையடுத்து ராபர்ட் பயஸ், புழல் சிறையில் இருந்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் தனிவேன் ஊடாக சென்னை நீலாங்கரையிலுள்ள அவரது சட்டத்தரணி வீட்டுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை புறப்பட்டுச் சென்றார். (ஜ-2)

# அல்பேனியா

## மூவர் உயிரிழப்பு;



(ரிரானா)

ஐரோப்பா கண்டத்தின் தென் கிழக்கேயுள்ள நாடான அல்பேனியாவில் சக்திவாய்ந்த நில நடுக்கத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

குறித்த நிலநடுக்கமானது, நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.54 மணிக்கு அல்பேனியாவின் வடமேற்கேயுள்ள ஷிஜாக் பகுதியில் 10 கிலோ மீற்றர் ஆழ

## ஐ.எஸ்.பயங்கரவாதிகள் கைது; ப

### வாள்கள், தொலைபேசிகள், வரைபடங்கள் மீட்பு



(டில்லி)

3 ஐ.எஸ். ஆதரவு பயங்கரவாதிகள் வெடிகுண்டுகளுடன் பிடிபட்டதால் மிகப்பெரிய நாச வேலை தவிர்க்கப்பட்டு இருப்பதாக டில்லி பொலிஸ் துணை ஆணையர் தெரிவித்தார்.

டில்லி மற்றும் அசாமில் ஐ.எஸ். ஆதரவு பயங்கரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டு இருப்பதாக கடந்த வாரம் உளவுத்துறை இரகசிய தகவல் ஒன்றை மத்திய உள்துறைக்கு அனுப்பியது.

குறிப்பாக 3 பேரை குறிப்பிட்டு அவர்கள் தாக்குதல் நடத்துவதற்கு தயாராகி வருவதாக உளவுத்துறை எச்சரித்தது.

இதையடுத்து டில்லி பொலிஸாரும், அசாம் மாநில பொலிஸாரும் ஒருங்கிணைந்து நேற்று முன்தினம் அதிரடி வேட்டையில் ஈடுபட்டனர்.

அசாம் தலைநகர் கவுகாத்தியில்

## ஹொங்கொங் உள்ளாட்சி

## ஜனநாயக ஆதரவு இயக்கம் அ



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் ஜனநாயக ஆதரவு இயக்கம் அதிக இடங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது.

சீனாவின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங்கில் ஜனநாயக உரிமைகள் கோரி கடந்த 6 மாதங்களாக போராட்டம் நடந்து வருகிறது. இந்த போராட்டத்தில் அரங்கேறி வரும் வன்முறை சம்பவங்களால் ஹொங்கொங்கில் அசாதாரண சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்த நிலையில் போராட்டத்துக்கு மத்தியில் ஹொங்கொங்கில் உள்ளாட்சி தேர்தல் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

கடந்த 6 மாதங்களாக ஹொங்கொங்கில் நிலவிவரும் அமைதியின்மை மற்றும் ஜனநாயக ஆதரவு போராட்டங்களை அரசு கையாண்ட விதத்துக்கு மக்கள் சான்றிதழ் அளிக்கும் வாய்ப்பாகவே இந்த தேர்தல் பார்க்கப்பட்டது.

இதனால் முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்கள் இந்தத் தேர்தலில் அதிகம் ஆர்வம் காட்டினர். இதில் யாரும்

# ாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## ப்பு; 150 பேர் காயம்





த்தில் 6.4 ரிக்டர் அளவுகோலில் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இதனால் அல்பேனிய தலைநகர் ரிறானாவில், மக்கள் பீதி அடைந்து வீதிகளில் தஞ்சமடைந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மாண்டினீக்ரோ, கொசோவோ, வடக்கு மசிடோனியா மற்றும் கிரீஸ் போன்ற தொலைவிலுள்ள நாடுகளிலும் இதன் தாக்கம் உணரப்பட்டது.

குறித்த நிலநடுக்கத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன் 150 பேர் காயமடைந்தனர்.

மேலும், பல குடியிருப்பு கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளதாக உள்ளூர் செய்தி தெரிவித்தது.

இந்நிலையில், ஏறக்குறைய 30 ஆண்டுகளின் பின்னர் அல்பேனியாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் இதுவாகும். (ஜ-2)

## து; பாரிய குண்டுவெடிப்பு தவிர்ப்பு

ட்பு



நடந்த சோதனையில் 3 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களது பெயர் முகாதீர் இஸ்லாம், ரஞ்சித் இஸ்லாம், ஜமீல்லூயிட் என்று தெரிய வந்தது. இவர்கள் மூவரும் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் பயங்கர ஆதரவாளர்கள்.

பெங்களூரில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இவர்கள் பயிற்சி பெற்றதாக தெரிய வந்துள்ளது. அவர்கள் மூலம் தான் குண்டுவெடிப்பை நடத்துவதற்கான முயற்சிகளை மூவரும் மேற்கொண்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கைதான 3 பயங்கரவாதிகளின் வீடுகளில் பொலிஸார் சோதனை நடத்தினார்கள்.

அப்போது வெடிகுண்டுகள், ஒரு கிலோ வெடிபொருள் மற்றும் வெடி குண்டு தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் வாள்கள், 4 தொலைபேசிகள், வரைபடங்கள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டன. 3 பயங்கரவாதிகள் மீதும் பல்வேறு பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்களை பொலிஸார் இரகசிய இடத்தில் வைத்து விசாரித்து வருகிறார்கள்.

3 ஐ.எஸ். ஆதரவு பயங்கரவாதிகள் பிடிபட்டதால் மிகப் பெரிய நாசவேலை தவிர்க்கப்பட்டு இருப்பதாக டில்லி பொலிஸ் துணை ஆணையர் பிரமோத் சிங் தெரிவித்தார். (ஜ-2)

## ாட்சி தேர்தலில்
## ம் அமோக வெற்றி



எதிர்பாராத வகையில் அரசுக்கு எதிராக போராடி வரும் ஜனநாயக ஆதரவு இயக்கத்தின் வேட்பாளர்கள் பெரும்பாலான இடங்களை கைப்பற்றினர்.

இந்த தேர்தல் முடிவுகள் நிர்வாக தலைவர் கேரி லாமுக்கான கடும் கண்டனமாகவும், போராட்டத்துக்கான ஆதரவாகவும் பார்க்கப்படுகிறது.

சீன அரசு ஆதரவு பெற்ற வேட்பாளர்கள் பலரும் இந்த தேர்தலில் தோல்வியடைந்திருப்பதால், இது அந்த நாட்டு அரசுக்கு பெரும் பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது. எனினும் தேர்தல் முடிவுகளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதாக கேரிலாம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்

"ஹொங்கொங்கின் தற்போதைய நிலைமை மற்றும் சமூகத்தில் உள்ள ஆழ்ந்த பிரச்சினைகள் குறித்து மக்கள் அதிருப்தியை இந்த தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கிறது. பொது உறுப்பினர்களின் கருத்துகளை அரசு தாழ்மையுடன் கேட்டு, அதற்கேற்ப செயற்படும்" என தெரிவித்தார்.

ஹொங்கொங் மக்களில் பெரும்பாலானோர் சீனாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் என்பதை இந்த தேர்தல் முடிவுகள் உணர்த்தி இருப்பதாக ஜனநாயக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்தனர். (ஜ-2)

# விக்கிலீக்ஸ் நிறுவுநருக்கு அதிதீவிர சிகிச்சை தேவை

## 60 வைத்தியர்கள் இணைந்து கோரிக்கை

(லண்டன்)

லண்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 'விக்கி லீக்ஸ்' நிறுவுநர் அசாஞ்சேவுக்கு தீவிர சிகிச்சை தேவை என்று 60-க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இணைந்து இங்கிலாந்து உள்துறை செயலாளர் பிரீத்தி பட்டேலுக்கு கடிதம் எழுதினர்.

அமெரிக்காவின் இராணுவ இரகசியங்கள் தொடர்பான ஆவணங்களை வெளியிட்டு உலகமெங்கும் பிரபலமானவர், 'விக்கி லீக்ஸ்' நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே. இந்த விவகாரத்தில் ஜூலியன் அசாஞ்சேவை கைது செய்ய அமெரிக்கா தீவிரம் காட்டியது.

நாடு கடத்தும் சூழ்நிலை உருவானதால் கடந்த 2012ஆம் ஆண்டு அவர், லண்டனில் உள்ள ஈக்குவடார் நாட்டு தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். 7 ஆண்டுகளுக்கு பிறகு அசாஞ்சேவுக்கான அடைக்கலத்தை ஈக்குவடார் அரசு திடீரென வாபஸ் பெற்றதால் கடந்த ஏப்ரல் மாதம் அவர் லண்டன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பிணை நிபந்தனையை மீறிய குற்றச்சாட்டில் 50 வாரம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, லண்டனின் புறநகரில் உள்ள பெல்மர்ஷ் சிறையில் அசாஞ்சே அடைக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் தனிமை சிறையில் வைக்கப்பட்டுள்ளதால் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.

இந்த நிலையில் அசாஞ்சேவின் உடல் நிலை தொடர்பாக 60 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் இணைந்து இங்கிலாந்து உள்துறை செயலாளர் பிரீத்தி பட்டேலுக்கு கடிதம் எழுதினர்.

அந்தக்கடிதத்தில், "அசாஞ்சே, மனச்சோர்வு உள்ளிட்ட உளவியல் பிரச்சினைகளாலும், பல் மற்றும் தோள்பட்டை தொடர்பான நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உடனடியாக ஒரு பல்கலைக்கழக மருத்துவமனையில் முழுமையான சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்" என்று தெரிவித்தனர்.

இது குறித்து அவுஸ்திரேலியாவை சேர்ந்த வைத்தியர் லிசா ஜான்சன் கூறுகையில், "சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள அசாஞ்சே மருத்துவரீதியாக தகுதியானவரா? என்பதை தீர்மானிக்க ஒரு சுதந்திரமாக மருத்துவ மதிப்பீடு தேவை" எனத் தெரிவித்தார். (ஜ-2)

# உயர் மின்னழுத்த கம்பிகளில் சிக்கிய விமானம்
# அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய விமானி





(வோஷிங்டன்)


அமெரிக்காவில் சிறிய ரக விமானம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து பறந்ததில் உயர் மின்னழுத்த கம்பிகளில் சிக்கிய சம்பவம் இடம்பெற்றது.

அமெரிக்காவின் மின சோட்டா மாநிலத்தை சேர்ந்தவர் 65 வயதான தோமஸ் காஸ்கோவிச் பைபெர் கப் எனும் தனது சிறிய வகை விமானத்தை நேற்று முன்தினம் செலுத்தினார். ஸ்காட் கவுண்டி பகுதியில்சென்று கொண்டிருந்த போது திடீரென விமானம் கட்டுப்பாட்டை யிழந்தது.

இதையடுத்து தாறுமாறாக அங்குமிங்குமாக பறந்த விமானம் அங்கிருந்த உயர் மின்னழுத்த கம்பிகளில் சிக்கியது. இதையடுத்து தகவல் அறிந்த மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

'அவசர எண்ணான 911 க்கு அழைப்பு வந்த உடன் சம்பவ இடத்திற்கு விரைந்தோம். மின்னழுத்த கம்பிகளில் மின்சாரம் உடனடியாக துண்டிக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக விமானி எவ்வித காயமுமின்றி மீட்கப்பட்டார்' என பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-2)

# வெளிவிவகார அமைச்சர் தினேஷுடன் இந்திய, சீன தூதுவர்கள் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கையின் இடைக்கால அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்த்தன பொறுப்பேற்றதையடுத்து, வெளிநாட்டுத் தூதுவர்கள் அவரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதையடுத்து, இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்துவும், சீனத் தூதுவர் செங் ஷியுவானும் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அத்துடன் இருதரப்பு உறவுகள் குறித்தும் வெளிவிவகார அமைச்சருடன், இந்திய, சீனத் தூதுவர்கள் கலந்துரையாடினர். (இ-7)

# திருகோணமலையில் இந்திய கடற்படைக் கப்பல்

(திருகோணமலை)

இந்தியக் கடற்படைக் கப்பலான 'நிரேக்ஷக்' பயிற்சிப் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. இந்தக் கப்பலுக்கு இலங்கைக் கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பளித்தனர்.

திருகோணமலைக்கு வந்துள்ள இந்தியக் கடற்படைக் கப்பலின் கட்டளை அதிகாரி கொமாண்டர் பிரசாந்த், இலங்கைக் கடற்படையின் கிழக்குத் தலைமையக கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் மெரில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.



இந்தியக் கடற்படைக் கப்பல் எதிர்வரும் டிசெம்பர் 3ஆம் திகதி வரை திருகோணமலையில் தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் போது சீனக் கடற்படைக் கப்பல் ஒன்று கொழும்பில் தரித்திருந்தது.

தேர்தல் முடிந்த பின்னர், கடந்த 19ஆம் திகதி அம்பாந்தோட்டைக்கு ரஷ்ய கடற்படைக் கப்பல் ஒன்று வந்தது.

தற்போது இந்தியக் கடற்படைக் கப்பல் திருகோணமலைக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வீதியை விட்டு விலகி திடீரென வடிகானில் விழுந்த பேருந்து



(ஹற்றன்)

மஸ்கெலியா ஹற்றன் பிரதான வீதியின் ரொக்குட் பகுதியில் நேற்று முன்தினம் மாலை தனியார் பேருந்து ஒன்று வடிகானில் விழுந்து விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்து மஸ்கெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கிப் பயணிகளுடன் சென்ற போது வீதியைவிட்டு விலகி வடிகானில் வீழ்ந்தது.

இந்நிலையில் குறித்த விபத்தில் எவரும் காயமடையவில்லை என்றும் ஹற்றன் மஸ்கெலியா இடையிலான போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன என நோர்வூட் பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான 20 பெண் தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(அக்கரபத்தனை)

அக்கரபத்தனை பிரதேச சபைக்குட்பட்ட டயகம தோட்ட 2 ஆம் பிரிவில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 20 பெண் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி டயகம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் பணிபுரிந்த தேயிலை மலையின் தேயிலைச் செடியின் கீழ்ப்புறத்தில் கட்டப்பட்டிருந்த குளவிக் கூடு கலைந்ததால் குறித்த 20 பெண் தொழி லாளர்களும் குளவிக் கொட்டுக்கு இலக்கானதாக அக்கரபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரும் டயகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மாணவர் பெருமை

ஒரு பெரிய காடு. அந்தக் காட்டுக்கு மத்தியிலே ஒரு ஆச்சிரமம். அங்கே ஒரு முனிவர் இருந்தார். பல இடங்களிலேயிருந்து வரும் குழந்தைகளுக்கு அவர் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டு இருந்தார். ஏழை, பணக்காரன் என்கிற வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் அவரிடம் தங்கள் பிள்ளைகலை அனுப்பி வைத்தார்கள். மன்னர்களுடைய பிள்ளைகள் கூட அவரிடம்தான் படிக்க வருவார்கள். ஆனால் அந்த முனிவரைப் பொறுத்தவரைக்கும் எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுதான்.இது யார் வீட்டுப் பிள்ளை என்றெல்லாம் பார்க்கமாட்டார். எல்லோரும் சமன்.

மாணவர்கள் எல்லாம் அங்கேயே மாதக் கணக்கிலே, வருஷக் கணக்கிலே தங்கியிருந்து பாடம் கற்றுக் கொண்டு போவார்கள். அவராப் பார்த்துப் போ என்று சொல்கிற வரைக்கும் அங்கேயே இருக்க வேண்டும், படிக்க வேண்டும் .குருகுலவாசம். ஒரு சமயம் ஒரு ராஜகுமாரனும் அவரிடம் வந்து படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு பதினைந்து வயது இருக்கும். சில வருடம் கழித்து அந்த முனிவர் தன்னிடம் இருக்கிற மாணவர்களுக்கு பரீட்சை வைத்தார். அவர்களுக்கு அறிவு முதிர்ச்சியைக் கணிக்கிறதுக்கு பல சோதனைகள் வைத்தார். ஒவ்வொருவராகப் பார்த்து இனிமேல் நீ உங்க வீட்டுக்கு போகலாம் என்று சொல்லி அனுப்பி வைத்திருக்கிறார்.

எல்லோரும் சென்று விட்டார்கள். கடைசியாக மிஞ்சியிருந்து ஒரே ஒரு மாணவன். அவனை மட்டும் வீட்டுக்கு அனுப்பவில்லை. யார் அந்தப் பையன் தெரியுமா? ராஜகுமாரன் தான்! அந்த ராஜகுமாரனுடைய தந்தைக்கு- அதுதான் ராஜாவுக்கு அங்கே வயசு ஏறிக் கொண்டே போனது. என்ன இது.... படிக்க போன பையன் திரும்பி வரவில்லையே என்று நினைத்தார்.

வந்தால் வீரைவாக அவனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு தான் விலகிக் கொள்ளலாம் என்று நினைத்தார். கல்யாணம் வேற செய்து வைக்க வேண்டும். ஆனால் பையன் வருகிற வழியைக் காணோம். ராஜா பார்த்தார் .சரி நேரிலேயே சென்று என்னவென்று தெரிந்து கொண்டு வரலாம் என்று காட்டுக்குப் புறப்பட்டார். அங்கேயே போய் முனிவரைப் பார்த்தார். முனிவர் இவரை அன்பாக வரவேற்றார். ராஜா மெதுவாக எல்லோரையும் வீட்டுக்கு அனுப்வி விட்டீர்களாமே. என் பிள்ளையை மட்டும் என்று இழுத்தார்.முனிவர் இதற்கு பதில் சொல்லவில்லை! ராஜாவை அழைத்துக் கொண்டு சென்று விருந்தினர் குடிசையிலே தங்க வைத்தார். அப்புறம் சொன்னார்.

உங்கள் மகன் எல்லாப் பாடங்களிலேயும் முதல் இடம் பெற்றுக் கொண்டார். இப்படி முதலாவதாக வரும் மாணவனுக்கு நாங்கள் தேர்வு வைக்கிறது வழக்கம். அதிலும் அவன் முதலாவதாக வந்து விட்டால் அவன் ஒரு பெரிய வித்துவான் என்கிற கௌரவத்தை அடைவான் என்றார் முனிவர். அப்படி சொல்லிவிட்டு சென்று விட்டார். ராஜா அங்கேயே தங்கினார். இராத்திரி படுத்துத் தூங்கினார். காலையிலேயே எழுந்து அந்த குடிசைக்கு வெளியே வந்தார் பல் துல்க்குவதற்காக! அந்த சமயத்திலே தூரத்தில் ஒருவன் ஒரு கையிலே கோடரியை வைத்து கொண்டு தலையிலே ஒரு பெரிய விறகுக் கட்டை சுமந்து கொண்டு வந்திருக்கிறது தெரிந்தது. யாராவது விறகு வெட்டியாக இருக்கும் என்று நினைத்தார்.

ராஜாவிடம் வந்ததும் உற்றுப் பார்த்தார். பார்த்தால் அது தன்னுடைய பிள்ளை. திகைத்துப் போனார் என்ன இது ஒரு ராஜகுமாரனைக் கூட இது மாதிரி வேலையெல்லாம் செய்யச் சொல்கிறார்களே!என்று நினைத்தார்.


ராஜகுமாரன் விறகு கட்டையைக் கொண்டு சென்று கொல்லைப் பக்கம் வைத்தான்.அதே சமயம் முனிவர் அங்கே வந்தார். என் மகனே விறகு வெட்டிக் கொண்டு வந்துவிட்டாயா? சரி இப்பொழுது.. ஒரு துடைப்பதை எடுத்துக்கொள். விருந்தினர் குடிசையின் வாசல் பக்கத்தைக் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய் போ என்றார். அப்படியே செய்கிறேன் குருவே என்று சொல்லிவிட்டுப் போனான். சுத்தம் செய்தான். ராஜா பார்த்தார் இதை!. உடனே ஓடி வந்தார் மகனே. என்ன காரியம் செய்கிறாய் துடைப்பத்தை கீழே போடு என்றார். இப்பொழுது அந்த ராஜகுமாரன் சொல்கிறான். தந்தையே இது என்னுடைய குரு தேவரின் உத்தரவு. இங்கே நான் ஒரு மாணவன் இங்கே அரசனும் ஒன்றுதான். ஆண்டியும் ஒன்றுதான். குருதேவர் சொல்கிறதை மறுக்காமல் செய்வதுதான் எங்கள் கடமை என்றான். இந்த சமயம் முனிவர் அங்கே வந்தார் .இவனை முதுகிலே தட்டிக்கொடுத்தார்.

அப்புறம் ராஜாவிடம் சொன்னார். அரசே உங்க பிள்ளை எங்கள் கடைசித் தேர்விலே வெற்றி பெற்று விட்டான். பணிவுதான் மாணவர்களின் மிக உயர்ந்த குணம். குருநாதர் சொல்வது மனதுக்குப் பிடிக்கவில்லை என்றால் கூட மறுக்காமல் செய்ய வேண்டும் . அப்படி செய்வதாலே எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது என்கிற விவேகம் அவர்களுக்கு வந்துவிடும். இந்தக் குணம் வந்து விட்டது என்றால் அவர்கள் எத்தனை கடுமையான வேலையாக இருந்தால் கூட சுலபமாகச் செய்து முடிப்பார்கள். துக்கத்திலேயும் துவண்டு போய் விடமாட்டார்கள். இந்தப் பணிவும் விவேகமும் அவர்களிடம் மன உறுதியை ஏற்படுத்தும். அந்த உறுதி உங்கள் பையனுக்கு வந்து விட்டது. இனிமேல் அவனை நீங்க அழைத்துக் கொண்டு போகலாம். அவன் நிச்சயமாகப் பேரும் புகழும் பெறுவான் என்றார் குருதேவர். ராஜா அவரைப் பார்த்து.. குருதேவா... புரிந்து கொண்டேன் என்னை மன்னிக்க வேண்டும் என்றார். அதன்பின்பு மகனை அழைத்துக் கொண்டு வந்து விட்டார். இந்தக் கதையைத் இன்று ஒரு தகவலிலே சொல்லுங்கள் சேர்... மாணவர்கள் கேட்டால் பணிவாக இருப்பது எப்படி என்பதை புரிந்து கொள்வார்கள் என்றார் ஒருவர். சரி சொல்லுவொம். அதற்கு முன்னர் நேரிலே ஒரு பையனிடம் சொல்லிப் பார்க்கலாமே என்று தோன்றியது. உடனே ஒரு பையனைக் கூப்பிட்டோம்.

ஏனப்பா உங்கள் வாத்தியார் உனக்கு இது மாதிரி ஒரு பரீட்சை வைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டோம். நானும் அப்படித் தான் சேர் நடந்து கொள்வேன். விறகு வெட்டுவேன், துடைப்பத்தாலே கூட்டிச் சுத்தம் செய்வேன், உடனே செய்து முடித்து விடுவேன் என்றான். பலே பரவாயில்லை என்றேன். ஆமா சேர் அப்படி செய்தால் தானே வீட்டுக்கு அனுப்புவார்.இல்லை என்றால் இன்னொரு வருஷம் இங்கேயே இருந்து படி என்று சொல்லி விடுவாரோ என்றான் அந்தப் பையன்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொத்துமல்லிக் கீரையும் காட்டுக் கொத்துமல்லியும்



Coriandrum Sativum



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இரண்டு மூலிகைகளும் செடி இனத்தை சேர்ந்தது. ஆனால் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்த மூலிகையாகும். இதில் காட்டுக் கொத்துமல்லி சர்க்கரை நிலவேம்பு என்றும் கூறப்படுகிறது.

இதில் காட்டுக் கொத்து மல்லி அல்லது சர்க்கரை நிலவேம்பு நீரிழிவு நோயைக் க்கட்டுப்படுத்தும் முக்கிய மூலிகையாகும்.

**கொத்து மல்லியின்,**

Botanical Name- Coriandrum sativum

Family- Apiaceae

**காட்டுக்கொத்து மல்லி அல்லது சர்க்கரை நிலவேம்பின்,**

Botanical Name- Scoparia dulcis

Family- Scrophulariaceae

காட்டுக்கொத்துமல்லியானது ஈரலிப்பான நிலங்களில் வளர்கின்ற சிறு செடி. இச் செடியின் முழுப்பகுதியிலும் நீரிழிவு நோயினை கட்டுப்படுத்துகின்ற "amellin" எனும் வேதியியற் பொருள் உள்ளது.

வேருடன் கூடிய இச் செடியைச் சேகரித்து சிறு சிறு துண்டுகளாக வெட்டி 1 பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை அருந்திவர நீரிழிவு நோய் கட்டுப்படுவதுடன் சிறுநீரக நோய்களுக்கும் சிறந்த மூலிகையாகும்.

இதன் இலைகளை இளந்தண்டுகளுடன் கீரையாக கடைந்து சாப்பிட்டு வர சமிபாட்டுத் தொகுதி பலப்படும்.

இதன் முழுச் செடியையும் நன்கு கழுவி பட்டுப் போல அரைத்து முகப்பருவிற்கு பூசலாம்.

இதன் செடியில் ஊறல் குடிநீரால் வாய் கொப்பளித்துவர முரசு வீங்கிக் காணப்படல் குறைந்து பற்கள் திடகாத்திரமாக வரும்.

15-45 செ.மீ.உயரமுடைய செடியாகும். இலைகள் பிளவுபட்டிருக்கும். பிளவுபட்ட அடியிலை நுனியை விட அகலமாக இருக்கும். விதைகளை விதைத்து 3 முதல் 6 வாரம் வயதுடைய செடிகளை கீரையாகவும் மருத்துவ குணங்களுக்காகவும் பயன்படுத்தலாம். கரிசல் வகை மண்ணிற்கு ஏற்றது இந்தப்பயிர்.

புதிய கொத்துமல்லி விதைகளை இரண்டாகத் தட்டிப் பாத்திகளில் போடுவதால் நமது வீட்டுத் தோட்டத்திலே கொத்து மல்லிக் கீரையை வளர்த்துக்கொள்ளலாம்.

100 கிராம் கொத்து மல்லிக் கீரையிலுள்ள சத்துக்கள்

- புரதம் 3.3 கிராம்
- கொழுப்பு 0.6 கிராம்
- நார்ப்பொருள் 1.2 கிராம்
- காபோவைதரேற்று 6.3 கிராம்
- கல்சியம் 184 மில்லி கிராம்
- பொஸ்பரஸ் 71 மில்லி கிராம்
- இரும்பு 18.5 மில்லி கிராம்
- உயிர்சத்து "C" 135 மில்லிகிராம்
- மகனீசியம் 64 மில்லி கிராம்
- சோடியம் 58.3 மில்லி கிராம்
- பொட்டாசியம் 256 மில்லிகிராம்
- கரோட்டின் 6918 மைக்கிரோ கிராம்

200 மில்லி மோரில் 2 தேக்கரண்டி கொத்து மல்லி இலைச்சாறு சேர்த்து கலக்கி அருந்த வாய்க்கசப்பு, வாந்தி உண்டாதல் போன்றவை நீங்கும்.



Scoparia Dulcis

முகப்பரு, சிறுகட்டிகள் முதலியவை நீங்குவதற்கு கொத்துமல்லி இலைச்சாற்றுடன் மஞ்சள் தூளை கலக்கி குழைத்து இரவில் படுக்க முன்பு பூசிவர வேண்டும். முகத்தின் தோலும் மென்மையாகும்.

ஒரு தேக்கரண்டி கொத்து மல்லிக் கீரையை ஊறவைத்து அதனுடன் ஒரு சிறிய துண்டு இஞ்சி, ஒரு வெல்லம் சேர்த்து மை போல அரைத்து ஒரு தேக்கரண்டி நெய்யில் வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட பித்த அஜீரணம், தலைச் சுற்றல் நீங்கும்.

துவரம் பருப்பு, தேங்காயுடன் கொத்து மல்லிக் கீரையை சேர்த்தரைத்து துலையலை நெய் சேர்த்து சோற்றுடன் உண்டுவர நாக்குப் புண்ணும் வயிற்றுப் புண்ணும் வாய்ப்புண்ணும் நீங்கும்.

கொத்துமல்லிப் பூவை சமைத்துச் சாப்பிட உஷ்ணம் நீங்கும். உடல் களைப்பு நீங்கி உடல் சுறுசுறுப் படையும்.

பச்சையாக இலைகளை வாயில் போட்டு மென்று உண்பதால் வாய்த்துர்நாற்றம் நீங்கும்.

கொத்துமல்லிச்சாறு, பூண்டுச்சாறு, வெந்தயச்சாறு மூன்றையும் சம அளவு எடுத்து தேன் சேர்த்து கொதிக்க வைத்து இறக்கவும்.

பின்னர் இதில் தினமும் காலை, மாலை இருவேளை 30 சாப்பிட்டு வந்தால் இதயம் பலப்படும்.

இதய நோயாளிகளுக்கு கொத்துமல்லி இலைச் சாற்றில் சின்னச்சீரகத்தை ஊற வைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் காலை, மாலை இருவேளை 2 கிராம் அளவிற்கு சாப்பிட்டால் கொழுப்பு குறையும். இரத்த அழுத்தம் சீராகும்.

கொத்துமல்லி இலைச் சாற்றில் கருஞ்சீரகத்தை ஊறவைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் 1 கிராம் அளவுக்கு தேனில் குழைத்து சாப்பிட்டால் மாதவிலக்கு கோளாறுகள் குணமாகும். கொத்துமல்லி இலைச்சாறு, புதினாச்சாறு, வெள்ளரிக்காய்ச்சாறு மூன்றையும் கலந்து முகத்தில் பூசிவர முகப்பருக்கள் நீங்கி முகம் பளபளப்பாக வரும்.

கொத்துமல்லி இலையில் அதிகளவு விற்றமின் "C" உள்ளது. செரியாமைக்கும் சிறந்த மூலிகையாகும்.

இலையை துவையல் அல்லது இரசம் தயாரித்தும் பயன்படுத்தலாம்.

## நல்லூரிலிருந்து கதிர்காமம் வரை புனித திருத்தல தரிசன யாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து கதிர்காமக்கந்தன் ஆலயம் நோக்கிய புனித திருத்தல தரிசன யாத்திரை எதிர்வரும் 03 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் யாத்திரையில் இணைய விரும்பும் அடியார்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவை மேற்கொள்ளவும். கலந்து கொள்ளும் அடியார்கள் சைவத்தமிழ் பண்பாட்டு கலாசார உடையணிந்து வரல் வேண்டும். ஆண்கள் வேட்டி, பெண்கள் சாறி, பஞ்சாபி வயதுக்கேற்ற வகையில் அணிதல் வேண்டும். மற்றும் மதுபானம், புகைத்தல், மாமிசம் உண்ணல், வெற்றிலை பாவித்தல், நீர் நிலைகள் அருவிகளில் நீராடுதல் அனைத்துக்கும் முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 077 923 6552 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-9)

## மாணவர்களின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட மனை முகாமைத்துவம், கணனிப்பயிற்சி, புத்தகம் கட்டுதல், தையல், கைவினைக்கலைகள் தொடர்பான பயிற்சி நெறிகளில் பயின்ற மாணவர்களின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.பாலராஜ் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொள்வார். இப் பயிற்சி நெறியில் பயின்ற அனைவரும் அன்றையதினம் சான்றிதழ்களைப் பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசிடம் ரோஹித வலியுறுத்து



(பத்தரமுல்ல)

நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 13 அம்சக் கோரிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவளித்தமை காரணமாகவே அந்தக் கட்சிக்குள் தற்போது பிளவு ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

ஐ.தே.க. அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட மோசடிகளுடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து சட்டத்தை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பத்தரமுல்ல - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தமிழ்ப் பெயர்ப் பலகைகள் நீக்கப்பட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும்!

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள தமிழ்ப் பெயர்ப்பலகைகளுக்கு சேதம் ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்படும் என பொலிஸார் எச்சரித்தனர்.

ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிக்கு மேலதிகமாக தமிழ் மொழியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளை நீக்கியமை தொடர்பில் பாணந்துறை தெற்கு பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை தடுப்பதற்காக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொலிஸ் தலைமையகத்தால் சிரேஷ்ட பொலிஸாருக்கு உத்தர விடப்பட்டது.

அதற்கமைய நடமாடும் சேவை, மோட்டார் துவிச்சக்கர வண்டி மற்றும் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு ஏற்படக்கூடிய சம்பவத்தை தடுக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது.

இதே முறையில் முறைப்பாடு ஒன்று குறித்த பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்தவுடன் உதவி பொலிஸ் அத்தியட்சகரால் விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவ்வாறான சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும். என ஆலோசனை வழங்கப்பட்டது. (இ-7)

# கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(மாளியாவத்தை)

மன்னார் பள்ளிமுனை மற்றும் தலைமன்னார் பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதி நிதிகள் தாம் எதிர்கொள்ளும் தொழில் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடல்ஒன்றை மேற் கொண்டனர்.

அமைச்சின் அலுவலக த்தில் இச்சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது நீண்டகாலமாக தாம் தமது தொழில் நடவடிக்கைகளில் எதிர்கொண்டுவரும் தடைகள், பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கைகளை முன்வைத் தனர்.

இக் கலந் துரையாடலின் போது குறித்த மீன்பிடிச் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு விரைவான தீர்வுகளைப் பெற்றுத்தருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (இ-5-7)



# ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக சமரநாயக்க

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹான் சமரநாயக்க ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். அவர் நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஊடகத் துறையில் நான்கு தசாப்தகால அனுபவத்தைக் கொண்டுள்ள சமரநாயக, "தவச" பத்திரிகையின் உதவி ஆசிரியராக ஊடகத் தொழிலில் பிரவேசித்தார்.

அதன் பின்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் உதவி ஆசிரியராக சேவையாற்றிய அவர், பின்னர் ஐந்து வருட காலமாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் செய்திப் பிரிவின் பணிப்பாளர் பதவியை வகித்தார்.

அதன் பின்னர் சமரநாயக, கொழும்பு ஐ.நா. தகவல் மையத்தின் தலைவராக நீண்டகாலம் சேவையாற்றினார். அதனைத் தொடர்ந்து அவர் இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இந் நிலையில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். (இ-7)

# மாணவர்களின் சீருடைகளுக்கான வவுச்சர்கள் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளுக்கான வவுச்சர்களை விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம்.ரத்நாயக்க தெரிவித்தார்.

பாடசாலை சீருடைகளை வழங்குவதற்கான போதிய காலம் இன்மையால் புதிய வருடத்திற்கான சீருடைகளுக்கான வவுச்சர்களை வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில், 45 இலட்சத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளுக்கு பதிலாக வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்யப்படவுள்ளதாக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நடவடிக்கைகளும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்திற்குள் நிறைவு செய்யப்படும் எனவும் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 150 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 115 | 130 |
| பச்சைமிளகாய் | 350 | 240 | 320 | 230 | 300 |
| தக்காளி | 140 | 100 | 100 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 70 | 80 |
| கோவா | 120 | 120 | 140 | 100 | 160 |
| கரட் | 250 | 230 | 280 | 200 | 300 |
| பூசணி | 50 | 50 | 80 | 30-80 | 60 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 350 | 320 | 440 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 160 | 110 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 | — | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 140 | 160 | 120 | 130 | 120 |
| லீக்ஸ் | 150 | 200 | 280 | 280 | 300 |
| பீற்றூட் | 240 | 150 | 160 | 90 | 200 |
| கறிமிளகாய் | 300 | 260 | 280 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 450 | 800 | 600 | — | — |
| போஞ்சி | 100 | 80 | 120 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 120 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 70 | 40 | 50 |
| தேசிக்காய் | 100 | 250 | 150 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40-45 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 240 | 350 | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | — | — | 120 | — | — |
| முள்ளங்கி | 150 | 140 | 140 | 40 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 120 | 50 | 150 | 100 |

# கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படும்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் திட்டவட்டம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என வீதி, பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமைச்சின் கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகளில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதென்பது நாம் அறிந்த விடயமே. துறைமுகம் தொடர்பில் பலர் என்னுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார்கள். வர்த்தகர்களும் கலந்துரையாடல்களை முன்னெடுத்தார்கள். துறைமுக செயற்பாடுகளில் பெருமளவு தாமதங்கள் ஏற்படுகின்றன என்பதே அவர்களின் பிரதான குற்றச்சாட்டாகும்.

எனவே இம்முனைய நிர்மாணப் பணிகளை விரைவாக ஆரம்பிக்க வேண்டும். இவ் விடயம் தொடர்பில் இன்று அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளேன்.

இம்முனையத்தின் பணிகளை துரிதகதியில் ஆரம்பிப்பதே என்னுடைய ஒரே எதிர்பார்ப்பாகும். இதனை மிக விரைவில் முன்னெடுக்க வேண்டும் என்பதே என் ஒரே நம்பிக்கையாகும்.

துறைமுக செயற்பாடுகளைத் துரிதகதியில் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எந்தவொரு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள இராணுவம் தயார்



## தளபதி சவேந்திர சில்வா உறுதி

(கொழும்பு)

இலங்கை இராணுவம் எந்தவொரு அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் உள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உறுதிபடத் தெரிவித்தார். இலங்கை இராணுவம் மரபுசாராத ஆபத்துக்களையும் ஏனைய ஆபத்துக்களையும் இனம் கண்டுள்ளது. இதன் காரணமாக தயார் நிலையிலுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் இராணுவம் தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியின் தொலைநோக்கிற்கு ஏற்ப இந்த நடவடிக்கைகளை படையினரின் ஆதரவுடன் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

இராணுவத்தின் அனைத்து படையணியினர் மத்தியிலும் உயர்ந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேணுவோம் தவறிழைப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தயங்க மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)










# மாநகர சபை நிர்வாகப் பரப்பிற்குள் விசேட சுத்திகரிப்புத் திட்டம் ஆரம்பம்

## முதல்வர் ஆனல்ட் பங்கேற்பு







(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் யாழ்.மாநகரசபை, யாழ்.பிரதேச செயலகம், யாழ். பொலிஸார் மற்றும் சமூக அமைப்புக்கள் இணைந்து மேற்கொள்ளும் விசேட சுத்திகரிப்பு வேலைத்திட்டம் நேற்று யாழ்.நகர் கோட்டைப் பகுதியில் காலை 7.30 மணியளவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் பங்கேற்றார்.

குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற கழிவுகளை தரம் பிரித்து அகற்றுதல், டெங்கு பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு அவற்றை அகற்றுதல் போன்ற விழிப்புணர்வு செயற்பாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (HQI), யாழ்ப்பாணம் பொலிஸார், யாழ். மாநகர பிரதி முதல்வர், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், யாழ்.பிரதேச செயலக அதிகாரிகள், யாழ். மாநகர பொதுச் சுகாதார பொறியியற் பிரிவின் பொறுப்பதிகாரிகள், மாநகர சுகாதாரப் பிரிவினர், மாநகர சபை ஊழியர்கள், பணியாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டோர் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பல இடங்களில் இச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (இ-5)

# பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு புத்தூர் பொது நூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவும் "புதுவை நாதம்" சஞ்சிகை வெளியீடும் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மண்டபத்தில் வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம், சிறப்பு விருந்தினராக புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அதிபர் செ. இளங்கோ ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# கலை விழாவும் ஆண்டு நிறைவும்

(கொடிகாமம்)

வரணி குடும்ப முன்பள்ளிகளின் கலை விழாவும் ஆண்டு நிறைவு விழாவும் நாளை மறுதினம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள வரணி கலாசார மண்டபத்தில் வரணிப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி லோகிதன் கேதிகா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன், சட்டத்தரணியும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினருமான க.சதீஸ்வரன், தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் த.ரவீந்திரன், கௌரவ விருந்தினர்களாக வரணி பனை தென்னைவள அபிவிருத்தி சங்கங்களின் கொத்தணி முகாமையாளர் க.அருட்செல்வன், வரணி ஒன்றியத் தலைவர் வே.நாகதேவன், நெல்லியடி செலிங்கோ லைவ் முகாமையாளர் திருமதி ஜனார்த்தனன் சோபனா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-114)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


இலங்கையில் தற்கொலை தடுப்பு செயற்றிட்டத்தை முன்னெடுத்துவரும் ஸ்ரீலங்கா சுமித்ரயோ அமைப்பின் தேசிய சபையின் தலைவர் திருமதி குமுதினி டி.சில்வா தலைமையிலான குழுவினருக்கும் ''கைகொடுக்கும் நண்பர்கள்'' ஸ்ரீலங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக்கிளையினருக்குமிடையிலான கலந்துரையாடல் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்வியங்காடு சங்கிலியன் மன்றத்தில் நடைபெறும் என ஸ்ரீலங்கா சுமித்ரயோ யாழ். கிளையின் இயக் குநர் ஏ.மௌலி அறிவித்துள்ளார். (இ-5)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1900

Search for people, places and things

**புவியா**

சதா இதயத்துடிப்பு



மனைவியின் 5 மிஸ்டு கால் பார்த்தவுடன் இதய து(வெ)டிப்பு.

**சுபா**

பசுவுக்கும் கொசுவுக்கும் என்ன வித்தியாசம்தெரியுமா...?



பசு தன் ரத்தத்தை பாலா கொடுக்குது
கொசு நம்ம ரத்தத்தை பாலா குடிக்கிது

**ரஜீவ்**

உனது வாழ்க்கை எல்லை அமைத்து வாழ் ஆனால்



ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு போதும் வாழ்க்கையை அமைத்து விடாதே...

**எழிலினி**

அடுத்தவன் வளர்ச்சியை விமர்சிக்கும் நேரத்தை நீ உன் வளர்ச்சிக்காக செலவிட்டு பார் அவனை விட நீ உயர்ந்து நிற்பாய்...



**சாருஜன்**

எல்லா மனைவிகளிடம் இந்த தனிப்பட்ட திறமை உண்டு..!



**றொசானா**

நோயாளி: பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய எவ்வளவு செலவாகும்...டாக்டர்...?
டாக்டர்: 5 லட்ச ரூபாய் ஆகும்ங்க...!




நோயாளி: ஒருவேளை நாங்களே பிளாஸ்டிக்கை கொண்டு வந்துட்டா எவ்வளவு குறைப்பீங்க...?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# அனுபவம் புதுமை



ஜகந்நாதன் எப்போதுமே தன்னைச் சுற்றி நடக்கும் விடயங்களை உன்னிப்பாகக் கவனிக்கும் பழக்கம் உடையவன்.

அதனால்தான் அந்தக் கோயில் வாசலில் நின்று கொண்டிருந்த அந்த நடுத்தர வயது ஆசாமியை அவன் கவனிக்க நேர்ந்தது.

ஜகந்நாதன் கோயிலிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்த போது, அந்த ஆள் கோயில் வாசலுக்குச் சில அடிகள் தள்ளி நின்று கொண்டு கோயிலிலிருந்து வெளியில் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒருவேளை, அவனுடன் வந்தவர்கள் கோயிலிலிருந்து வெளியே வருகிறார்களா? என்று பார்த்துக் கொண்டிருக்கிறானோ என்று ஜகந்நாதன் முதலில் நினைத்தான். ஆனால் அவன் குறிப்பாகச் சிலரை உற்றுக் கவனித்ததைப் பார்த்தபோது, ஏதோ நோட்டம் பார்க்கிறான் என்று ஜகந்நாதனுக்குத் தோன்றியது.

என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று நினைத்து ஜகந்நாதன் வேறொரு பக்கமாகப் போய் நின்று கொண்டான்.

கோயிலில் அப்படி ஒன்றும் கூட்டமில்லை. ஆயினும் பிரசித்தி பெற்ற கோயில் என்பதால் வெளியூரிலிருந்து யாத்திரிகர்கள் வந்து போய்க் கொண்டிருந்தனர். சற்று இடைவெளி விட்டாவது சிலர் கோயிலிலிருந்து வெளியே வந்து கொண்டுதான் இருந்தார்கள்.

நாலைந்து பேர் கொண்ட ஒரு குடும்பம் வெளியே வந்தது. அப்போது அந்த ஆள் அவர்கள் பின்னால் போனான். ஆனால் அவர்கள் அருகில் செல்லாமல் சற்றுப் பின்னாலேயே நின்றான். சில நிமிடங்கள் கழித்துத் திரும்பி வந்து பழைய இடத்திலேயே நின்று கொண்டான்.

இது போல் இரண்டு மூன்று முறை நடந்தது.

அதன் பிறகு ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பம் வெளியே வந்தது. அவன் அவர்களைப் பின்தொடர்ந்து போனான். பிறகு அவர்களுக்கு முன்னால் போய் நின்று ஏதோ சொன்னான். அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டனர். பிறகு அவனிடம் ஏதோ கேட்க அவனும் பதில் சொல்ல அவர்களுக்கிடையே ஒரு சுருக்கமான உரையாடல் நடந்தது.

பிறகு அவர்கள் அவன் பின்னால் சென்றனர்.

அவன் அவர்களிடம் ஏதோ சொல்லி அவர்களை ஏமாற்றி எங்கோ அழைத்துச் செல்கிறானோ என்ற சந்தேகம் ஜகந்நாதனுக்கு ஏற்பட்டது. எங்கே அழைத்துப் போகிறான் என்று பார்க்கலாம் என்று கருதி ஜகந்நாதன் அவர்கள் பின்னால் சென்றான்.

சற்றுத் தள்ளியிருந்த ஒரு ஹோட்டலுக்குள் அவர்கள் நுழைந்தனர். அவர்களைப் பார்த்ததும் கல்லாவில் உட்கார்ந்திருந்தவர் எழுந்து நின்று அவர்களுக்கு வணக்கம் செலுத்தி விட்டு "வாங்க" என்றார். பிறகு அவர் உள்ளே போகும்படி கைகாட்டியதும் அவர்களை அழைத்து வந்த ஆள் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றான்.

ஜகந்நாதன் ஹோட்டலுக்குள் போனான். எங்கே உட்காரலாம் என்று பார்ப்பது போல் சுற்றுமுற்றும் பார்த்தான். அந்த ஐந்து போரையும் அந்த ஆள் ஃபேமிலி ரூமுக்குள் அழைத்துச் சென்று அவர்களை அங்கே உட்கார வைப்பதைப் பார்த்தான்.

ஜகந்நாதன் அந்த அறையைப் பார்த்தபடி ஒரு மேஜையில் உட்கார்ந்தான். தன்னை விசாரித்த சர்வரிடம் கோப்பி கொண்டு வரச் சொல்லி விட்டு அறையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்களுக்கு இலை போடப்பட்டு உணவு பரிமாறப்பட்டது.

ஜகந்நாதன் கோப்பி குடித்து விட்டு வெளியே வந்தான். கல்லாவில் அமர்ந்திருந்தவனிடம் பில்லுக்குப் பணம் கொடுத்து விட்டு "உங்ககிட்ட ஒண்ணு கேக்கலாமா? நீங்கதானே முதலாளி? என்றான்.

"ஆமாம். இதைத்தான் கேக்க வந்தீங்களா?" என்றான் அவன் சிரித்தபடி.

"இல்லை. உங்க கடை ஆளு ஒருத்தர் கோயிலிலிருந்து ஒரு குடும்பத்தை அழைச்சுக்கிட்டு வந்து உள்ள சாப்பிட அழைச்சுட்டுப் போறதைப் பாத்தேன்."

"ஓ அதுவா? ஹோட்டல் தொழிலை இங்கிலீஸிலே ஹொஸ்பிடாலிட்டி இண்டஸ்ட்ரின்னு சொல்லுவாங்க. தமிழில விருந்தோம்பல் தொழில்னு சொல்லலாம். ஆனா விருந்தோம்பல்னா, நாம யாரை யாவது கூப்பிட்டு வந்து சாப்பாடு போடணும் இல்ல? அதுதான் தினமும் கோயிலுக்கு வருகிறவர்களிலே ஒரு குடும்பத்தை அழைச்சுக்கிட்டு வந்து அவங்களுக்கு சாப்பாடு போடுறதுன்னு ஒரு வழக்கத்தை வச்சுக்கிட்டிருக்கேன்" "ஓ அதுதான் உங்க ஆள் கோயிலிலிருந்து வெளியில வருகிறவர்களைப் பாத்துக்கிட்டிருந்தாரா? ஆமாம், எப்படி நீங்க ஒரு குடும்பத்தைத் தேர்ந்தெடுக்கிறீங்க?"

"யாரை வேணும் என்றாலும் கூப்பிட்டு வந்து சாப்பாடு போடலாம் சேர். ஆனால், கோயிலுக்கு வருகிறவர்களில் கொஞ்சம் வசதிக்குறைவானவங்களாப் பார்த்துத் தேர்ந்தெடுத்து அவங்களுக்கு சாப்பாடு போட்டா நாம செய்யிற காரியம் இன்னும் பயனுள்ளதாக இருக்கும்னு நினைக்கிறேன். அதனால என்னோட ஆளை கோயிலிலிருந்து வெளியே வருகிற குடும்பங்களைக் கவனிக்கச் சொல்லுவேன்.

"சில பேரு எங்க சாப்பிடலாம்கிறதைப் பற்றித் தங்களுக்குள்ள பேசிப்பாங்க. அவங்க பேசிக்கிறதிலேயிருந்து அவங்க வசதியானவங்களா வசதிக்குறைவானவங்களான்னு தெரியும். வசதிக்குறைவானங்களாத் தெரிஞ்சா, எங்க ஆளு அவங்ககிட்ட போயி, கோயிலுக்குப் போயிட்டு வருகிறவர்களில ஒரு குடும்பத்துக்கு எங்க ஹோட்டல்ல சாப்பாடு போடுறது வழக்கம்னு சொல்லி அவங்களைக் கூப்பிடுவார். சில பேரு ஒத்துப்பாங்க. சில பேரு தயங்குவாங்க. அவங்களுக்கு விருப்பம் இல்லேன்னா வேற ஒரு குடும்பத்தைக் கேப்பாரு"

"ரொம்ப நல்ல காரியம் செய்யறீங்க சேர். பாராட்டுக்கள்." என்று சொல்லி விடைபெற்றான் ஜகந்நாதன்.

குறள் 87

இனைத்துணைத் தென்ப தொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

பொருள்:

விருந்தோம்பல் என்ற வேள்வியின் பயன் எவ்வளவு என்று கூற முடியாது. அது விருந்தினரின் தகுதியின் அளவைப் பொறுத்தது.

## தமிழ் பழமொழிகள்

- காடு காத்தவனும் கச்சேரி காத்தவனும் பலன் அடைவான்.
- சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.
- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- பூமியைப்போலப் பொறுமை வேண்டும்.
- காவடிப் பாரம் சுமக்கிறவனுக்குத் தெரியும்.
- மத்தளத்திற்கு இரு புறமும் இடி.
- அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
- கள்ளம் பெரிதோ? காப்பு பெரிதோ!
- முளையில் கிள்ளாதது முற்றினால், கோடரிகொண்டு வெட்ட வேண்டும் .
- கேட்டதெல்லாம் நம்பாதே? நம்பியதெல்லாம் சொல்லாதே?
- சொல்வல்லவனை வெல்லல் அரிது.
- எளியவன் பெண்டாட்டி எல்லோருக்கும் மைத்துனி.
- இந்தக் கூழுக்கா இருபத்தெட்டு நாமம்!
- நுணலும் தன் வாயால் கெடும்.

## விடுகதைகளும் விடைகளும்

- தாளம் இல்லாமல் பாட்டுப்பாடுவார் பாடகர் அல்ல நோய் இல்லாவிட்டாலும் தேடி வந்து ஊசி குத்துவார் மருத்துவர் அல்ல வலையைக் கண்டால் மிரண்டுபோவார் மீனும் அல்ல. அது என்ன?

**கொசு**

- பறக்கும் இது பறவை போல தலைகீழாய்த் தொங்கும் கோட்டான் போல பாலூட்டும் ஆனால் பசுவல்ல பழம் தின்னும் கிளியும் அல்ல அது என்ன?

**வௌவால்**

- கூரை வீட்டைப் பிரிச்ச ஓட்டு வீடு ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை வெள்ளை மாளிகையின் நடுவே குளம். அது என்ன?

**தேங்காய்**

- தரையிலும் இருப்பான் நீரிலும் இருப்பான் வாலோடு பிறந்தவன் வளர்ந்ததும் வாலை இழந்தவன்கை, கால் இரண்டு கத்திக் கத்தியே கெடுவான். அது என்ன?

**தவளை**

- அந்தி கருக்கையிலே அம்பலத்திலே ஆடுகிறான் ஆடும் அவன் உடம்பெல்லாம் வண்ணக் கண்கள்?

**மயில்**

- பூவிலே நான் ஒரு வெள்ளைப்பூ பூமி பார்த்து முகம் காட்டிச் சிரிப்பேன் ஒரு எண்ணெயின் பெயரைச் சொன்னால் நான் யாரெனத் தெரியும்?

**எள்ளுப்பூ**

- யானைக்குப் பிடிக்கும் அடித்தால் வலிக்கும் வாய் வைத்துக் கடித்தால் நுனி கசக்கும் அடி இனிக்கும் அது என்ன?

**கரும்பு**

# ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில்

# நான்கு கடற்றொழில் துறைமுகங்கள் தரம் உயர்வு!

## அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை



(கொழும்பு)

கடல் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தி அதன் ஊடான ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலும் உள்ளூர் பயனாளிகளுக்கு சுகாதாரமான கடலுணவை வழங்கும் முகமாகவும் முதற்கட்டமாக நான்கு கடற்றொழில் துறைமுகங்களை தரம் உயர்த்தும் நடவடிக்கைகள் கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கையில் அமையப்பெற்றுள்ள 21 பிரதான கடற்றொழில் துறைமுகங்களில் காலி, பேருவளை, குடாவெல்ல, புராணவெல்ல ஆகிய நான்கு கடற்றொழில் துறைமுகங்களே முதற்கட்டமாக தரம் உயர்த்தப்படவுள்ள நிலையில் மேற்படி தரம் உயர்த்தும் ஏற்பாடுகளை விரைந்து முன்னெடுப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கினார்.

இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதன் ஊடாக மேற்படி நான்கு கடற்றொழில் துறைமுகங்களைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடுகின்ற குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் உயருகின்ற அதேவேளை தரமான கடற்றொழில் உற்பத்திகளின் மூலமான நாட்டின் ஏற்றுமதி வருமானத்தையும் அதிகரிக்க முடியும் என்பதால் இத்திட்டத்தை குறித்த பகுதி மக்கள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேற்படி திட்டமானது பிரான்ஸ் நாட்டு அரச அனுசரணையுடனான அரசசார் நிறுவனமான பிரான்ஸ் அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் இலங்கை கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைதியாக இருக்கின்றோம் சீண்டிப் பார்க்க வேண்டாம்

## வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை



(கொழும்பு)

மலையக சமூகத்தவராகிய நாம் நாட்டுக்காகவும் அபிவிருத்திக்காகவும் உச்சக்கட்ட பங்களிப்பை வழங்கி வருகின்றோம்.

எமது மக்களின் சக்தி மிகப் பெரியது. எமது சமூகம் கொச்சைப்படுத்தப்படுவதை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம். நாம் அமைதியாக இருக்கின்றோம் என்பதற்காக எவரும் சீண்டிப்பார்க்க முனைய வேண்டாம். 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதனை சகலரும் புரிந்துகொள்ளுங்கள். இல்லையேல் விளைவுகள் பாரதூரமாக அமையும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் எச்சரித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் இந்நாட்டு மக்களிடையே இணக்கப்பாடற்ற ஒரு சூழ்நிலைக்கு வித்திட்டிருக்கின்றன. சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற அடையாளங்கள் தெளிவாக வெளித்தெரிவதற்கு தேர்தல் முடிவுகள் உந்துசக்தியாகியிருக்கின்றன. தேர்தலின் பின்னர் சிறுபான்மையினர் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சிறுபான்மையினர் ஓரணியில் நின்று வாக்களித்தமை தொடர்பிலும் கண்டனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சில புல்லுருவிகள் இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு இம்மக்களைக் கூறுபோடும் அல்லது வேரறுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஆனால் ஒரு விடயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் பிரதான கட்சிகளில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இருவரும் சிங்களப் பௌத்தர்களே. இவர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே எமது மக்கள் வாக்களித்தனர். பொதுமக்கள் இனவாத ரீதியில் வாக்களிக்கவில்லை என்பதே உண்மையாகும். இதனை சகலரும் விளங்கிக் கொள்ள வேண்டும். மலையக மக்கள் இந்நாட்டின் அபிவிருத்திக்கு தோள் கொடுப்பவர்கள். இந்நாட்டின் தேசிய வருமானத்தில் கணிசமான வகிபாகம் இம்மக்களுடையதாகும். இந்நிலையில் அம்மக்களை கொச்சைப்படுத்தும் வகையில் சிலர் கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இம்மக்கள் கல்வியில் பின்தங்கியவர்கள் என்றும் திறமையற்றவர்கள் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தோட்டத் தொழிலாளர்களை இழிவுபடுத்தி அரசியல்வாதி ஒருவர் கருத்தை வெளிப்படுத்தி இருந்தார். இத்தகைய செயல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

அரச தொழில் துறைகளில் மலையக இளைஞர், யுவதிகள் பலர் ஈடுபட்டுள்ளனர். அபிவிருத்தியடைய வேண்டும் என்ற உற்சாகம் மலையகத்தவர்களிடையே காணப்படுகின்றது. இளைஞர்கள் விழிப்படைந்திருக்கின்றார்கள். இளைஞர் சக்தி மேலோங்கி வருகின்றது. இந்நிலையில் மலையக மக்களின் சமகால வாழ்க்கை நிலைமைகளை அறியாதவர்கள், மழைக்குக் கூட லயத்தில் ஒதுங்க வெட்கப்படுபவர்கள். மலையக மக்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

இம்மக்களைப் பற்றி விமர்சிப்பதற்கு இவர்களுக்கு அருகதை இல்லை. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே மலையக மக்களைக் கொச்சைப்படுத்திப் பேசுவது விந்தையிலும் விந்தையாகும். மலையக மக்களை யாரும் கிள்ளுக்கீரையாக நினைத்து விடக் கூடாது. இம்மக்களின் சக்தி மிக மிக அதிகமாகும். இம்மக்கள் அமைதியாக இருக்கின்றார்கள் என்பதற்காக இவர்களை எவரும் சீண்டிப்பார்க்க முனைதல் கூடாது. 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பதனை சகலரும் விளங்கிக்கொள்ள வேண்டும். மலையக சமூகம் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டு இப்போது முன்னேறிச் செல்கின்றது.

சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய ஆளுமை இச்சமூகத்துக்கு இருக்கின்றது. அரசியல்வாதிகள் என்ற ரீதியில் நாங்களும் எங்களால் முடிந்த உச்சக்கட்ட பங்களிப்பை மலையக சமூக அபிவிருத்தி கருதி வழங்கி வருகின்றோம். எமது சமூகம் கொச்சைப்படுத்தப்படுவதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். மலையக சமூகத்தின் ஒன்றிணைந்த சக்தியைக் கொண்டு இவர்களுக்குத் தக்க பதிலடி கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் மனைவி பலி! கணவன் கைது

(மகியங்கனை)

மோட்டார் சைக்கிளொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உயிரிழந்தார்.

குறித்த விபத்து மகியங்கனை - பிபிலை பிரதான வீதியில் இரண்டாம் மைல் கல் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. பிபிலையைச் சேர்ந்த 62 வயதுடைய டி.எம்.கலுமெனிக என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்நிலையில் பிபிலை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதுடன் மோட்டார் சைக்கிளை செலுத்திய பெண்ணின் கணவனைக் கைது செய்தனர்.

குறித்த நபர் சிறு காயங்களுக்குப்பட்டிருப்பதால் பொலிஸ் பாதுகாப்புடன் பிபிலை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (இ-7)

# சிங்கள மக்களால் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்-கருணா



(திக்கோடை)

சிங்கள மக்களால் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனரென முன்னாள் பிரதியமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்தார்.

மட்டக்களப்பு- திக்கோடை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி, தோல்வி குறித்து ஆய்வு செய்யும் மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றியடைவார். எனவே வெல்லும் அணியுடன் நாங்கள் பயணிப்போம். அதில் பயணிக்கின்ற போதுதான் நாங்கள் வாதிட்டு எமது உரிமையைக் கேட்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்டோம். ஆனால் மக்கள் தெளிவடையவில்லை.

இன்று சஜித் பிரேமதாஸவை கொண்டு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும். கிழக்கில் தமிழன் இருந்திருக்க முடியாததுடன் பாரிய பின்னடைவுகளை சந்தித்திருக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் இன்று சிங்கள மக்களால் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களின் அதிக வாக்குகளால் ஒரு ஜனாதிபதி உருவாகியுள்ளார். இதனை நிரூபித்துக் காட்டிய ஜனாதிபதித் தேர்தல் இதுதான்.

கடந்த காலங்களில் 6 ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. அந்தத் தேர்தல்களில் ஜனாதிபதியை சிறுபான்மை மக்களின் வாக்குகள் நிர்ணயித்தன. ஆனால் இன்றைக்கு பெரும்பான்மை மக்கள் மட்டும் போதும். வேறு இனம் தேவையில்லை என்ற கட்டத்திற்கு இந்தத் தேர்தல் நிரூபித்துள்ளது.

அதேவேளை இதுவரை உருவாக்கப்பட்ட மத்திய அமைச்சரவையில் அமைச்சர்களில் முஸ்லிம் அமைச்சர்கள் இல்லாத அமைச்சரவை இதுதான். இது எமக்கு பாரிய வெற்றி. மகிந்த ராஜபக்ஷ என்ன கூறினார் ஹக்கீம், றிசாத் என ஒருவரையும் எடுக்க மாட்டேன் என அவர் வாக்குறுதியளித்தார். அதனை அவர் செய்துகாட்டியுள்ளார்.

எனவே நாங்கள் தவறுகளை எவ்வாறு திருத்தப்போகின்றோம். எதிர்காலத்தில் இவ்வாறு தொடர்ந்து பிழையை விட்டுவிட்டு வந்து வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருமாறும் பாலம் கட்டித் தருமாறும் வீதியை போட்டுத் தருமாறும் கேட்க முடியாது.

நாங்கள் அவர்களுக்கு வாக்களித்தால் தான் உரிமையோடு கேட்கலாம். எனவே எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் சிறந்த முடிவுளை எடுக்கவேண்டும்.

தேர்தல் காலங்களில் மேடைகளில் சிலரை தேசியத் தலைவர் என விழிக்கின்றனர். ஆனால் எவருக்கும் அந்தத் தகுதியில்லை. எனக்குக் கூட தகுதியில்லை. நான் கூட தேசியத் தலைவர் பிரபாகரனால் வளர்க்கப்பட்டவன். அந்தத் தகுதி தலைவர் பிரபாகரனுக்கு மட்டும் தான் உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

முதலில் தூசியைக் கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம்.
- பிஷப் பார்க்லி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கழிவகற்றும் வேலைத்திட்டத்தை சிறப்பாக முகாமை செய்யுங்கள்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை மீண்டும் இந்தியாவின் பிரதமராகப் பாரத மக்கள் தெரிவு செய்தனர்.

இவ்வாறு நரேந்திர மோடி அவர்களை இந்திய மக்கள் தெரிவு செய்ததற்குள் மிகுந்த மதிப்பீடுகளும் கணிப்பீடுகளும் உண்டென்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

இதில் நரேந்திர மோடி அவர்கள் இந்தியாவின் பிரதமராக முதற்தடவை பதவியேற்ற கையோடு தூய்மையான இந்திய தேசம் என்பதைப் பிரகடனம் செய்தார்.

பாரதம் முழுவதையும் தூய்மையாக்கும் அவரின் திட்டம் கணிசமான வெற்றியைத் தந்தது.

இது அவர் மீண்டும் பிரதமராகுவதற்கு உதவியது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக, தூய்மை என்பது மிகவும் முக்கியமானது. பொது இடங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நகரங்கள், வீதிகள், வீட்டுச்சூழல்கள், வெற்றுக் காணிகள் என எங்கும் தூய்மை பேணப்படுமாக இருந்தால், அதனூடு ஏற்படுகின்ற சுற்றாடல் கவின்நிலை மக்களின் மனங்களிலும் நேர்க்கணிய சிந்தனைகளை உருவாக்கும்.

கூடவே எங்கும் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற மனப்பாங்கு அனைவரிடமும் ஏற்பட்டு விடும்.

இதன் பிற்பாடு எங்கள் பிரதேசமும் சிங்கப்பூர் போன்ற தூய்மைக்கு ஒப்பானது என்பதாக நிலைமை மாறும்.

எனினும் எங்கள் பிராந்தியங்களில் கழிவகற்றல் வேலைத்திட்டம் இன்னமும் செம்மையாகவில்லை.

இதனால் எங்கு பார்த்தாலும் குப்பை கூழமாக எங்கள் சுற்றாடல் காணப்படுகின்றது.

வீதியோரங்களில் குப்பைகள் கொட்டிக் கிடக்கின்றன். தங்கள் வீட்டுக்குப்பைகளை சரியான முறையில் அகற்ற வேண்டும் என்ற சிந்தனை அறவே இல்லாத நிலையில், தங்கள் வீட்டுக் கழிவுகளை பொட்டலமாக்கி அதனை மோட்டார் சைக்கிள்களில் கொண்டு சென்று வீதிகளில் கொட்டிவிட்டு தங்கள் பணி முடிந்து விட்டதாக நினைக்கின்ற அளவிலேயே மக்களின் மனநிலை உள்ளது.

இத்தகைய செயல்கள் தர்மமன்று. இவை மனிதப் பிறவி எடுத்துப் பாவத்தைச் சம்பாதித்து நரகத்தை அனுபவிப்பதற்கான காரியங்களாகும்.

எனவே கழிவகற்றல் என்ற விடயத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் பொருத்தமானதும் தொடர்ச்சியானதுமான வேலைத்திட்டத்தைத் தயார் செய்து அதனை அமுலாக்க வேண்டும்.

இதற்காக சிறிய கட்டணங்களை அறவிட்டாலும் அது தகும். இதுதவிர, கழிவகற்றலுக்கென விசேட பிரிவை உருவாக்குவதுடன் அம்புலன்ஸ் வண்டி, அனர்த்த முகாமை, சிறுவர் உரிமை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்றவற்றுக்கென விசேட தொலைபேசி அழைப்புகள் இருப்பதுபோல, கழிவகற்றும் வேலைக்கும் விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தி,

எங்கு கழிவகற்ற வேண்டுமோ அந்த இடம் பற்றித் தெரியப்படுத்தவும் வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளை உடனுக்குடன் அகற்றுவதற்காக மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சேவையைப் பெறுவதற்கும் வழிசமைக்க வேண்டும்.

இல்லையேல் எங்கும் நோய்த்தொற்று தலைவிரித்தாடுவது தவிர்க்க முடியாததே.

# அதாவுல்லாவின் முகத்திரையை கிழித்தெறிந்து பாடம் புகட்ட வேண்டும்- திகாம்பரம் காட்டம்

(ஹற்றன்)

முன்னாள் அமைச்சர் அதாவுல்லா எமது மக்களை இழிவுபடுத்திக் கூறியுள்ளார். இத்தகையவர்களின் முகத்திரையைக் கிழித்து மலையக மக்கள் என்றால் யார் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும்என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலையக மக்களை இழிவுபடுத்திப் பேசுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. எமது மக்களைப் படிப்பறிவு இல்லாதவர்கள் என்று கடந்த வாரம் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய முன்னாள் மாகாண அமைச்சர் ஒருவர் கூறியிருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அதே தொலைக்காட்சி விவாதத்தில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் அதாவுல்லா எமது மக்களை இழிவுபடுத்திக் கூறியுள்ளார். இத்தகையவர்களின் முகத்திரையைக் கிழித்து மலையக மக்கள் என்றால் யார் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும்

இந்நாட்டின் வளமான பொருளாதாரத்துக்கு தமது கடின உழைப்பை நல்கி எந்த விதமான சுபீட்சமும் இன்றி வாழ்ந்து வந்த மலையக மக்கள் சுயமாக சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். எதிர்நீச்சல் போட்டு தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள். அதன் காரணமாக அவர்களின் பிள்ளைகள் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்று சமூகத்துக்கு அந்தஸ்தைத் தேடிக் கொடுத்து வருகின்றார்கள். நாமும் எமது மக்கள் தனி வீடுகளில் கௌரவமாக வாழவேண்டும்என்று அரசியல் ரீதியில் காணி உரிமையை பெற்றுக் கொடுத்து வந்துள்ளோம்.

இவ்வாறு தலை நிமிர்ந்துள்ள, எமது சமூகத்தில் பிறந்து வளர்ந்த மலையக இளைஞர்கள் தமது திறமைகளின் ஊடாக நாட்டுக்கு பெருமை தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் டுபாய் நாட்டில் இடம்பெற்ற ஆணழகன் போட்டியில் கலந்து கொண்ட மலையக இளைஞன் மாதவன் ராஜகுமாரன் இரண்டாவது இடத்தைப் பெற்று நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளார். கல்வி கற்ற எத்தனையோ பேர் உயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகத்தவர்களுக்கு தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எடுத்துக் காட்டி வருகின்றார்கள்.

எமது மக்கள் தோட்டம் என்ற அடையாளத்திலிருந்து விடுபட்டு மலையக மக்கள் என்ற பெருமையோடு வாழ வேண்டும் என்று நாம் பாடுபட்டு வருகின்றோம். பெரும்பான்மைச் சமூகம் எமக்குரிய அந்தஸ்தை வழங்கத் தயாராக இருக்கின்ற நேரத்தில் சிறுபான்மை சமூகத்தவர்களே கேவலமான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொள்வதை நாம் சகித்துக் கொண்டும் பார்த்துக் கொண்டும் இருக்க முடியாது.

தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்ற தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் அதாவுல்லாவுக்கு உடனடியாக பதிலடி கொடுத்து எமது சமூகம் மானமுள்ள சமூகம் என்பதை பறைசாற்றியுள்ளார். அவரின் துணிச்சலுக்கும், சமூக உணர்வுக்கும் அனைவரது பாராட்டும் கிடைத்து வருகின்றது. அத்தோடு நாம் நின்று விடக் கூடாது. முன்னாள் அமைச்சர் அதாவுல்லாவின் அறியாமைக்கும் அகம்பாவத்துக்கும் தகுந்த பாடத்தைக் கற்பிக்க வேண்டும். அதற்கான கண்டனக் கூட்டங்களை நடத்தி எமது மக்களிடம் மன்னிப்புக் கேட்கவைக்க வேண்டும்.

மலையகத்தைச் சேர்ந்த முன்னாள் மாகாண அமைச்சர் ஒருவர் தோட்டங்களில் படித்தவர்கள் அதிகமாக இல்லை என்று கூறி இழிவுபடுத்தியுள்ளார். இன்னுமொருவர் வாடா, போடா என்று வாய்க்கு வந்தபடி பேசி உழைக்கும் மக்களை சீண்டிப்பார்த்துள்ளார். அவர்களின் முகத்திரைகளைக் கிழித்து அவர்கள்எத்தகையவர்கள்என்பதை அம்பலப்படுத்த வேண்டும்.

எந்தவொரு சமூகத்தையும் ஏளனமாக நோக்கினால் தகுந்த தண்டனை கிடைக்கும் என்பதற்கு மலையக சமூகம் எடுத்துக் காட்டாகத் திகழ வேண் டும். இன்று நாம் காட்டுகின்ற எதிர்ப்பும், கண்டனமும் எமது எதிர்காலச் சந்ததியினர் மானத்துடன் வாழ வழிவகுக்கும் என்பதை உணர்ந்து கருத்து பேதங்களை மறந்து சமூக ரீதியில் ஒன்றுபடுமாறு அழைப்பு விடுக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சால் யாழ்ப்பாணம் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் **Mobile Phone Repairing, Computer Networking, Computer Trouble Shooting, Photoshop** ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாக நடைபெறவுள்ளன.

ஆர்வமுள்ளோர் தமது சுயவிபரக் கோவையுடன் நாளை 28 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக விதாதா வள நிலையத்திற்கு நேரில் வந்து பதிவை மேற்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார்.

விதாதா வள நிலையத்தின் முகவரி: விதாதா வள நிலையம், யாழ்ப்பாணம் (பழைய பிரதேச செயலக வளாகம், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) தொ.பே.021 222 4093 என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

" பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"
- கவிஞர் புதுவை இரத்தினதுரை

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நமக்குப் பிறர் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ, அதையே நாம் பிறருக்குச் செய்ய வேண்டும். -காந்தியடிகள்

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
தனிமனித மாற்றத்தினூடாக சமத்துவத்திற்காய் அனைவரும் ஒன்றிணைவோம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் புனிதநகர், மாதனை, கற்கோவளம், பருத்தித்துறை வெளிச்சவீடு, கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, சிவப்பிரகாசம் 3ஆம்குறுக்குத்தெரு ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் உன்னாப்பிலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு, வண்ணாங்குளம், வட்டுவாகல், கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, முல்லைத்தீவு அரசாங்க அதிபர் அலுவலகம், ஓஷன் Park ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் இராஜேந்திர குளத்திலிருந்து உளுக்குளம்வரை, மறக்காரம்பளை, கணேசபுரம் பிரதேசம் ஆகிய பிர தேசங்களிலும் மின்தடைப்படும்.

## ஆன்மீகச் சிந்தனைகள்

### இது சேர்ந்தால் அது குறையும்

❖ மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூவாசைகளால் கட்டுண்டு கிடக்கிறான். இதிலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும்.

❖ மூவாசைகளும் நம்மை மீண்டும் மீண்டும் பிறவிச்சுழலில் தள்ளிவிடுகின்றன. கரையேற நாம் தான் முயற்சியில் இறங்கவேண்டும்.


❖ வியாதி தீரவேண்டுமானால் மருந்தோடு பத்தியமும் மிக முக்கியம். அதுபோல தெய்வீக வாழ்வில் ஈடுபட நினைப்பவன் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

❖ எவன் புகழை விரும்பாமல் தன் பணியைச் செய்து வருகிறானோ அவனுடைய புகழை மூவுலகிற்கும் கடவுள் தெரியப்படுத்துவார்.

❖ வயது தளர்ந்த காலத்தில் மனிதன் படும் துன்பத்தை எண்ணி இளைஞர்கள் தன்னைத் தானே திருத்திக் கொள்ள முயல வேண்டும்.

❖ தியானம், பக்தி, தர்மத்தில் ஈடுபாடு, ஒழுக்கம் இவையெல்லாம் நம் மனதில் இருக்குமானால் இருக்கும் இடமே புனிதமாகிவிடும்.

❖ பணம் ஒருவரிடம் சேரச் சேர சாப்பாடு, தூக்கம், ஒழுக்கம், பக்தி இவையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து விடும்.



சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் சானுஜன் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தால் நடத் தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சர்வதேச குத்துச் சண்டையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் விக்னேஸ்வரன் சானுஜன் வெள்ளிப் பதக்கத்தை வென்று பருத்தித்துறை ஹாட்லிக் கல் லூரிக்கும் வடமாகாணத்திற்கும் இலங்கைக்கும் பெருமை சேர்த் துள்ளார்.

# மனோகரா உதைபந்தாட்டத் தொடர் கலைமதி அணி மூன்றாமிடம்



மனோகரா உதைபந்தாட்டத் தொடரின் மூன்றாவது இடத்தைத் தீர்மானிக்கும் போட்டி அண்மையில் நடைபெற்றது.

மூன்றாவது இடத்திற்கான போட்டியில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி பலப் பரீட்சை நடத்தியது.

மிகவும் விறுவிறுப்பாக நடை பெற்ற போட்டியில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 4: 1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்திற் கான கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



கல்வி அமைச்சால் முதன் முறையாக நடத்தப்பட்ட தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டு விழாவில் 18 வயதுப் பெண்கள் பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி நாகராசா மியூசிகா சம்பியனானார். நேற்று முன்தினம் கொழும்பு சுகத தாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற 18 வயதுப் பிரிவு பெண்க ளுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி, நீளம் பாய்தல், ஈட்டி எறிதல் போட்டிகளில் அவர் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். மற்றுமொரு போட்டியில் 14 வயது ஆண் கள் பிரிவில் அராலி இந்துக் கல்லூரி மாணவன் அம்பிகை பாலன் தங்கம் வென்றார். 14 வயதுப் பிரிவு ஆண்க ளுக்கான 50 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி, 30 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி மற்றும் பந்து எறிதல் போட்டி ஆகிய வற்றில் அவர் முதலாமிடத்தைப் பெற்று தங்கம் வென் றார். 14 வயதுப் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி புன்னைநீராவி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி றோஜித தங்கம் வென்றார். 14 வயதுப் பிரிவு பெண்களுக்கான 50 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி, 30 மீற்றர் சக்கர நாற்காலி ஓட்டப் போட்டி மற்றும் பந்து எறிதல் போட்டி ஆகியவற்றில் முதலாமி டத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார். (க)

# அது ஒரு அணிபோன்று அல்ல குடும்பம் போன்று இருந்தது

## திஷார பெரேரா டுவிட்

இலங்கை அணியின் சகல துறை வீரர் திஷார பெரேரா அபுதாபியில் நடந்த டி 10 தொடர் முடிந்த நிலையில் நன்றி தெரிவி த்துள்ளார்.

அபுதாபியில் கடந்த 15ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை அபுதாபி டி10 லீக் போட்டி நடை பெற்றது. இதில் இறுதிப் போட் டியில் ஷேன் வாட்சன் தலைமை யிலான Deccan Gladiators அணியும், கிறிஸ்லின் தலை மையிலான Maratha Arabi ans அணியும் மோதின, இப்போட் டியில் மராத்தா அரபியன் ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது.

இந்நிலையில் இந்தத் தொட ரில் இலங்கையின் சகலதுறை வீரர் திஷார பெரேரா பங்களா டைகர்ஸ் அணிக்கா விளையாடி னார். இவரின் அணி மூன்றாம் இடத்தை பிடித்தது.



இதையடுத்து தொடர் முடிந்த தால், அவர் தன்னுடைய டுவிட் டர் பக்கத்தில், அணியில் இருந்த அனைவருக்கும் நன்றி, உங்க ளின் ஆதரவுக்கு நன்றி, இது ஒரு சிறந்த அனுபவம், மறக்க முடியாத அனுபவம், இது ஒரு அணி போன்று இல்லை, குடும் பம் போன்று இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# இன ரீதியாக அவமானப்படுத்தப்பட்டேன் மனம் வெதும்பிப்போன இங்கிலாந்து வீரர்



நியூசிலாந்தில் கிரிக்கெட் போட்டியின் போது இன அடிப் படையில் அவமானப்படுத்தப் பட்டதாக இங்கிலாந்து நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் தெரிவித்துள்ளார்.

2019 உலகக் கோப்பை இங் கிலாந்து அணி வெல்ல முக்கிய காரணமாக திகழ்ந்தவர் ஆர் ச்சர். பார்படாஸில் பிறந்த ஆர் ச்சர், 2015 ஆம் ஆண்டு இங்கி லாந்திற்கு குடிபெயர்ந்தார். மேலும், ஐசிசி விதியின் படி உலகக் கோப்பை தொடரில் இங்கிலாந்து அணிக்காக விளை யாட தகுதியும் பெற்றார்.

இந்நிலையில், இங்கிலாந்து அணி நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளை யாடி வருகிறது. இரு அணிக ளுக்கும் இடையே நடந்த முதல் டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து அணி நியூசிலாந்திடம் இன்னிங்ஸ் தோல்வியடைந் தது.

தோல்விக்கு பின் இங்கி லாந்து நட்சத்திர வீரர் டுவிட்டரில் பதிவிட்டதாவது, இன்று எனது அணியைக் காப்பாற்ற உதவு வதற்காக போராடும் போது, இன அவமதிப்புகளைக் கேட்பது சற்று தொந்தரவாக இருந்தது.

அந்த ஒரு பையனைத் தவிர இந்த வாரம் ரசிர்கள் வியக்க வைக்கும் வகையில் இருந்த னர், இங்கிலாந்தின் பார்மி ஆர்மி வழக்கம் போல் சிறப்பாக இருந்தது என தெரிவித்துள் ளார்.

ஆர்ச்சரின் கூற்றுக்களை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் விசாரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆர்ச்சர் இன அடிப்படையில் அவமானப்படுத்தப்படுவது இது முதன் முறை அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் சிசிடிவி மூலம் விசா ரணை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவித்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட், ஆர்ச்சரிடம் மன்னிப்பு கோருவதாக அறிக்கை வெளி யிட்டுள்ளது. (க)

# மீண்டும் கிரிக்கெட்டிற்குத் திரும்பிய அவுஸ்திரேலிய அணி வீரர்கள்



அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சகலதுறை வீரர் மக்ஸ்வெல். கடந்த ஒக்டோபர் 31 ஆம் திகதி மனநிலை அழுத்தம் காரணமாக கிரிக்கெட்டில் இரு ந்த சிறிது காலம் ஒதுங்கி இருப் பதாக அறிவித்தார். அதேபோல் நிக் மேடின்சன் கடந்த 9 ஆம் திகதி அறிவித்தார்.



இந்நிலையில் இருவரும் மீண்டும் கிரிக்கெட் போட்டிக்கு திரும்பியுள்ளனர். தற்போது விக்டோரியா பிரிமீயர் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மக்ஸ்வெல் பிட்ஸ்ராய் டான்காஸ்டர் அணிக்காக விளையாடினார். ஐந்து ஓட் டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த அவர், இரண்டு விக் கெட்டுக்களும் வீழ்த்தி அணி யின் வெற்றிக்கு உதவியாக இருந்தார். (க)

## சபாநாயகராக...

கள் இருவர், சபாநாயகராக தொடரும்படி கரு ஜயசூரியவிடம் கேட்டுக் கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், கரு ஜயசூரியவே சபாநாயகராக தொடர்வார் என தெரிகிறது.

புதிய சபாநாயகராக வாசுதேவ நாணயக்காரவை நியமிப்பதென அரச தரப்பு முன்னர் முடிவெடுத்திருந்தது. எனினும், தற்போது வெளியான இந்த செய்தியின்படி, வாசுதேவ சபாநாயகராக நியமிக் கப்படமாட்டார் என தெரிகிறது. (ம-3)

## வெங்காயத்தின்...

சந்தைகளிலும் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் வெங்காயம் ஒரு கிலோகிராம் 350 ரூபாய் தொடக்கம் 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. (ம-3)

### தமிழரின் நீதியான சுதந்திரத்திற்கு

# கோட்டாபய முன்னின்று செயற்பட வேண்டும்

## இரா.சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் நீதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னின்று செயற்பட வேண்டும் என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமாகிய இரா.சம்பந்தன் நேற்று மாலை ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மேற்கொண்டார் இதன் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் நீதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னின்று செயற்பட வேண்டும்.

இதனைத்தான் இந்தியாவும் தெளிவாக கூறியுள்ளது இதனையொட்டி எமது நாட்டின் ஜனாதிபதி எதிர்வரும் 29ஆம் திகதி இந்தியாவிற்கு பயணம் செல்லவுள்ளார்.

நாம் வாக்களித்த வேட்பாளர் தோல்வி பெற்றுள்ளார் புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.

எமது மக்களின் நீண்ட கால பிரச்சினை முடிவுக்கு வரும் காலம் நெருங்கி விட்டது. இது விடயமான கருமங்களை நாம் கடந்த காலங்களில் செய்துள்ளோம்.

கடந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலும் பல்வேறு கோரிக்கைகளை நாம் முன்வைத்து பேசியுள்ளோம். சர்வதேச சமூகத்திடமும் எமது நிலைமை ஒப்பிவிக்கப்பட்டுள்ளது.

அக்காலகட்டத்தில் அமெரிக்கா ஜப்பான் போன்ற சர்வதேச நாடுகளுக்கும் பல்வேறு வாக்குறுதி கள் கொடுக்கப்பட்டது அந்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

எனவே மேலும் காலதாமதம் செய்ய முடியாது எமது மக்களின் பிரச்சினையை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (ம-3)

## மாவீரர் தினத்தை சண்டைக்களமாக...

நேற்று யாழில்நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

கடந்த 19ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தனியாக சந்தித்து பேசியிருந்தேன். நினைவுகூருவது பற்றி அவருடன் பேசினேன். எவரையும் நினைவு கூர அனுமதிக்க வேண்டும், இது மக்களின் உணர்வுபூர்வ விடயம், இதை தடுக்கக்கூடாது என்று கூறியிருந்தேன். அதற்கு சாதகமாக பதிலை எனக்கு சொன்னார். ஜனாதிபதிக்கு இதை அறியத் தருவேன் என்றார்.

அரசு, பாதுகாப்பு தரப்பு தலையிடாமல் இருக்குமென நாம் எதிர்பார்க்கிறோம். அவர் வாக்குறுதியளித்தார் என சொல்லவில்லை. நான் சொன்னதை ஏற்றுக்கொண்டிருந்தார்.

நாங்களும் அந்த நிகழ்வை அந்த நிகழ்விற்குரிய மரியாதையுடனும், மதிப்போடும் அனுஷ்டிப்பது நல்லது. இந்த நிகழ்வை ஒரு சண்டைக்களமாக மாற்றுகிற போக்கில் நாமும் போகாமலிருப்பது நல்லது. அது இறந்தவர்களிற்கு செய்யும் அவமரியாதையாகவுமிருக்கலாம். அதனால் நாமும் பக்குவமாக, கவனமாக, ஆனால் எமது உரித்தை விட்டுக்கொடுக்காமல் அந்த தினத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

புதிய ஜனாதிபதியுடன் நான் பேசியிருக்கிறேன். அவர் அதிகார பகிர்வுக்கு எதிரானவராக தெரியவில்லை. அவர் அமெரிக்க பிரஜை. அமெரிக்காவில் அமுலில் இருப்பது சமஷ்டி ஆட்சி முறை. அதை நன்றாக தெரிந்தவர். தன்னுடைய நாட்டில் இருப்பதை இந்த நாட்டில் அமுல்படுத்துவதில் பிரச்சினையிருக்காதென நினைக்கிறேன்.

செய்தியாளர் அவர் அமெரிக்க பிரஜையா?

சுமந்திரன் - அவர் அமெரிக்க பிரஜாவுரிமையை துறந்ததாக இன்னும் முழுமையான சான்றுகள் இல்லை என்றார். (ம-3)

## கண்ணீர்க் காணிக்கைக்கு தயாரான...

நடந்துமுடிந்த போராட்டத்தில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூர்ந்து வருடந்தோறும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 2009 யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மாவீரர் நாள் நிகழ்வுகள் வடக்கு கிழக்கில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் அனுஷ்டிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2019 மாவீரர் நாள் ஏற்பாடுகள் ஒவ்வொரு துயிலுமில்லங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறே அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் அரசியல் கட்சி வேறுபாடுகளை கடந்து அனைத்துத் தரப்பினர்களும் இணைந்து மாவீரர் நாளுக்குரிய பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மாவீரர் நாளில் தமது உறவுகளை நினைவுகூர்ந்து வணக்கம் செலுத்துவதற்காக மாவீரர்களது உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் என அனைவரும் தாயகத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று, தமிழினத்திற்காகத் தம்மையே கொடை செய்த புனிதர்களுக்கு நன்றியுணர்வோடு உணர்வெழுச்சியாக வணக்கம் செலுத்தவுள்ளனர்.

அடக்குமுறைகளோடு வதைபட்ட தமிழினத்தின் அடிமை விலங்குடைத்தெறியப் புறப்பட்டு தன்னினத்திற்காக தமது இன்னுயிர்களையே ஈகம் செய்த புனிதர்களின் தியாகங்களையும் அவர்களது வரலாற்றையும் தமிழினத்தின் இளைய தலைமுறை அறிந்து அவர்களின் ஈகங்களை என்றென்றும் அழியாது பேணிக் காப்பதற்காகவும் எமது அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதற்காகவும் மாவீரர்களை விதைத்த புனித பூமியாம் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு சிறுவர்களையும் இளையவர்களையும் அழைத்துச் சென்று, தமிழினத்தின் விடிவுக்காகப் போராடிய வீரவித்துக்களை நினைவு கூர்ந்து வணக்கம் செலுத்தி நன்றியுணர்வோடு வாழ வழிகாட்டுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-3.9.10.100.312.250.281.299)


அபிவிருத்தி லொத்தர் சபை — J 03 20 32 68 — சீட்டிழுப்பு வாரம்: 525 — இளம்சிவப்பு — 26/11 2019 — செவ்வாய்க்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,405,685 — தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI — சீட்டிழுப்பு இல: 803 — வர்ணம் : இளநீலம் — சீட்டிழுப்பு திகதி: 2019.11.26 — இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,715,640/- — வெற்றி இலக்கங்கள் 02 04 22 58 — ஆங்கில எழுத்து G — அபிவிருத்தி லொத்தர் சபை — தொலைபேசி: 0112 333 546-47 — 0114 825 825

ஜயோதா — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு வாரம் 1624 — சீட்டிழுப்பு திகதி 26/11/2019 — வெற்றி இலக்கங்கள் 05 24 41 46 — ஆங்கில எழுத்து K — ரூ. 41,511,136 — தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk — அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம் — திகதி 26/11/2019 — வெற்றி வாரம் 2689 — வர்ணம் சிவப்பு — வெற்றி இலக்கங்கள் சிம்மம் 03 06 17 52 — புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,595,726 — 2019/11/27 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும் — வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் — தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk — SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## வடக்கு ஆளுந...

போது அதற்கு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து, விரைவில் வடக்கு ஆளுநராக முரளிதரன் பதவியேற்கவுள்ளார்.

கிழக்கு ஆளுநராக திஸ்ஸ விதாரண பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெள்ளி முதல்...

மீண்டும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## முதியவரின்...

பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் கனகசபை (வயது 65) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில், இரவு நேர காவல் தொழிலாளியாகப் பணி புரிந்து வந்தவரென விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக நாச்சிக்குடா பொலிஸார் தெரிவித்தனர். (ம-3.100)

## யாழ்.பல்கலை வளாகத்துக்...

இந்த நிலையில் இன்றும் நாளையும் பல்கலை வளாகத்துக்குள் எந்த நிகழ்வுகளையும் நடத்த வேண்டாம் என நேற்று காலை பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரி கே.கந்தசாமியால் மாணவர் ஒன்றியத்துக்கு அறிவித்தல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று மாலை, இன்றும் நாளையும் பல்கலை வளாகத்துக்குள் மாணவர்கள் நுழைய வேண்டாம் என திடீர் அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

அதாவது அனைத்துபீட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக வளாகத்தினுள் 27.11.2019 மற்றும் 28.11.2019 ஆகிய தினங்களில் உட்பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. எந்தக்காரணமும் இன்றி தடை விதிக்கப்பட்டமைக்கு மாணவர்கள் தமது விசனத்தை வெளியிட்டுள்ளனர். (ம-3.9)

## இராணுவம், பொலிஸார் நேற்று...

நடவடிக்கைகளால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் பிரதான வீதிகள் உட்பட்ட பல வீதிகளில், வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வீதிகளில் சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்ட நிலையிலும், மாவீரர் தினம் இன்று நினைவு கூரப்படவுள்ள நிலையிலும் திடீரென இவ்வாறு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-3)

## மாவீரர்களின் கல்வெட்டுக்கள்...

கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி முதல் இன்று 27ஆம் திகதி இரவு வரையில் இந்த கல்வெட்டுக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இருக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்தருணத்தில் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்த வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மாவீரர் வாரத்தின் இறுதி நாளான இன்று 27ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று சுடர்கள் ஏற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் மாவீரர் தொடக்கம் இறுதிப் போரில் வீரச்சாவடைந்த சுமார் 25ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெயர்கள் இந்தக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)


மஹஜன சம்பத — திகதி 2019/11/26 — சீட்டிழுப்பு இலக்கம் 4057 — O 1 3 1 0 5 3 — தேசிய லொத்தர் சபை

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 26-11-2019 — சீட்டிழுப்பு இலக்கம் 2312 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 15 21 42 47 — தேசிய லொத்தர் சபை

சேவன — திகதி 26/11/2019 — சீட்டிழுப்பு இலக்கம் 239 — M 28 33 42 57 — NATIONAL LOTTERIES BOARD

நீரோகா — திகதி 2019/11/26 — சீட்டிழுப்பு இலக்கம் 628 — லக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 09 22 38 49 — தேசிய லொத்தர் சபை

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-8255)



# பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி மெ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கணக்காளர் நா.இராசநாயகம் பிரதம. விருந்தினராகவும் ஓய்வு பெற்ற யாழ்.பல் கலைக்கழக உத்தியோகத்தர் சி.முருகையா சிறப்பு விருந்தினராகவும் பாடசாலையின் பழைய மாணவர் க.திலகேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ம)

வெளிநாடு-உள்நாடுகளுக்கான
விரைவுப் பொதிகள் சேவை
WESTERN UNION
070 330 5500
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-8322)

இரண்டு மணித்தியாலத்தில்
கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள்
077 9086737
GUNA BEST PC COMPUTER REPAIR
522 மானிப்பாய் வீதி ஒட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி
V2 TRAVELS
(C-8115)



BIOLOGY Bio Rank List 2021
Serial Exam
வெற்றி நிச்சயம்
N.T.GAJENTHIRAN

## N.T.GAJENTHIRAN

**Months - October**

| No | Name | School Name | Average | rank |
|---|---|---|---|---|
| 01. | Karnika Nanthakumar | J/Vembadi Girls' High School | 89.67 | 01 |
| 02. | Srishivani Krishnathasan | J/Vembadi Girls' High School | 86.15 | 02 |
| 03. | Jude Nirmalan Mishel Piraveen | j/Hindu College | 85.00 | 03 |
| 04. | Sripriya Thurairasasingam | J/Hindu Ladies College | 84.50 | 04 |
| 05. | Kobika Sasikaran | J/Kokuvil Hindu College | 84.45 | 05 |
| 06. | Ramiya Malarvannan (EM) | J/Vembadi Girls' High School | 81.30 | 06 |
| 07. | Sabarishna Mahendran | J/Uduvil Girls' College | 78.50 | 07 |
| 08. | Kishalini Arulnathan | J/Hindu Ladies College | 77.30 | 08 |
| 09. | Rosni Senthilvadivelu | J/Vembadi Girls' High School | 76.50 | 09 |
| 10. | Vithunisha Sankar | J/Vembadi Girls' High School | 76.50 | 09 |
| 11. | Arthiha Thirukumar(EM) | J/Vembadi Girls' High School | 76.07 | 11 |
| 12. | Hamshiga Ramanan | J/Hindu Ladies College | 75.00 | 12 |
| 13. | Jeyendran Rithursika | J/Kokuvil Hindu College | 75.00 | 12 |
| 14. | Tharani Rajendran(EM) | J/Vembadi Girls' High School | 74.75 | 14 |
| 15. | Nithiyananthan Maathavan(EM) | j/hindu College | 74.50 | 15 |
| 16. | Thushani Paramanantham(EM) | J/Vembadi Girls' High School | 73.65 | 16 |
| 17. | Javanika Jegatheeswaran(EM) | J/Vembadi Girls' High School | 73.50 | 17 |
| 18. | Amuthan Sharuja | J/Chavakachcheri Hindu College | 73.50 | 17 |
| 19. | Tharanghini Sarveswaran | J/Hindu Ladies College | 73.50 | 17 |
| 20. | Shanuja Ravendraraja | J/Vembadi Girls' High School | 73.00 | 20 |
| 21 | Dirusika Balasubramaniam | J/Hindu Ladies College | 73.00 | 20 |
| 22. | Kobika Thevarajan(EM) | J/Vembadi Girls' High School | 73.00 | 20 |
| 23. | Anoosika Arunkalaichelvan(EM) | J/Vembadi Girls' High School | 72.90 | 23 |
| 24. | Sivasithamparam Sugarna | J/Chavakachcheri Hindu College | 72.50 | 24 |
| 25. | Vaishnave Thayananthan | J/Vembadi Girls' High School | 72.00 | 25 |
| 26. | Sneka Eswaran | J/Hindu Ladies College | 71.50 | 26 |
| 27. | Venugoban Rishan. | j/Hindu College | 71.00 | 27 |
| 28. | Yathurshany Suntharamoorthy(EM) | J/Hindu Ladies College | 70.50 | 28 |
| 29. | Santhoshi Amithalingam | J/Hindu Ladies College | 70.15 | 29 |
| 30. | Indirakumar Thanusikan | J/Chavakachcheri Hindu College | 70.00 | 30 |
| 31. | Arane Indrajit | J/Vembadi Girls' High School | 69.00 | 31 |
| 32. | Angani SooriyaKumaran(EM) | J/Vembadi Girls' High School | 68.80 | 32 |
| 33. | Ranganathan Arnikan | j/hindu College | 68.50 | 33 |
| 34. | Soffiya Maraivaanan | J/Vembadi Girls' High School | 68.00 | 34 |
| 35. | Vithyasini Sriganeshakumar | J/Vembadi Girls' High School | 68.00 | 34 |
| 36. | Suruththika Suthakaran | J/Vayavilan Central College | 67.50 | 36 |
| 37. | Vinoshajini Vimalendiran | J/Vembadi Girls' High School | 67.25 | 37 |
| 38. | Thayaani Thavachelvan | J/Hindu Ladies College | 67.00 | 38 |
| 39. | Verlini Kumaravel | J/Chundikuli Girls College | 67.00 | 38 |
| 40. | Subramaniam Logithan | J/Chavakachcheri Hindu College | 67.00 | 38 |
| 41. | Theivigaa Arumugathasan(EM) | J/Vembadi Girls' High School | 66.80 | 41 |
| 42. | Nitharshana Nirmaleswaran | J/Vembadi Girls' High School | 66.50 | 42 |
| 43. | Thiruloganathan Gowreeshan | j/Hindu College | 66.00 | 43 |
| 44. | Thevarajan Kobiram | j/Hindu College | 66.00 | 43 |
| 45. | Suvethika Pasupatheeswaran | J/Vembadi Girls' High School | 65.65 | 45 |
| 46. | Sasikumar Linuxshan | J/st.John's College | 65.50 | 46 |
| 47. | Sindoory Sivanesan(EM) | J/Vembadi Girls' High School | 65.00 | 47 |
| 48. | Thivya Ganeshalingam(EM) | J/Vembadi Girls' High School | 64.50 | 48 |
| 49. | Sainthavy Majilvakanam(EM) | J/Uduvil Girls' College | 64.50 | 48 |
| 50. | Harnika Babu | J/Manipay Ladies College | 64.25 | 50 |
| 51. | Keerthana Vasanthan | J/Vembadi Girls' High School | 64.00 | 51 |
| 52. | Viveka Sriskantharajah | J/Hindu Ladies College | 64.00 | 51 |
| 53. | Sriskandarajah Lakshan | J/Central College | 64.00 | 51 |
| 54. | Piranavi Vasanthakumaran | J/Vembadi Girls' High School | 63.50 | 54 |
| 55. | Vergin Shabeena Nelsan | J/Chundikuli Girls College | 63.50 | 54 |
| 56. | Thayalarubiny Kumarasamy | J/Vembadi Girls' High School | 62.50 | 56 |
| 57. | Thanabalasingam Anutharshan | j/hindu College | 62.00 | 57 |
| 58. | Vasmi Vijayakumar | J/Hindu Ladies College | 62.00 | 57 |
| 59. | Karuna Vanujan | J/Vayavilan Central College | 61.50 | 59 |
| 60. | Muralitharan Kaviarasan | j/Hindu College | 61.50 | 59 |
| 61. | Suresh Thenuja | J/Mahajana College | 61.00 | 61 |
| 62. | Kirushika Thavanesan | J/Vembadi Girls' High School | 60.55 | 62 |
| 63. | Thusharaha Satheeskaran | J/Hindu Ladies College | 60.50 | 63 |
| 64. | Niruthan Paranthaman | j/Hindu College | 60.50 | 63 |
| 65. | Dansiya Sasikumar | J/Hindu Ladies College | 60.50 | 63 |
| 66. | Sishanuga Pulenthiran | J/Vembadi Girls' High School | 60.50 | 63 |
| 67. | Sathursika Pukaneswaran | J/Chankanai Saivapragasa M V | 60.50 | 63 |
| 68. | Umahkaanthan Jathusha | J/Arunodaya College | 60.00 | 68 |
| 69. | Luxica Pratheepan | J/Vembadi Girls' High School | 59.50 | 69 |
| 70. | Nithusha Vijayakumar | J/Hindu Ladies College | 59.50 | 69 |
| 71. | Lawoshy Iyanicka Kadhirselvan | J/Vembadi Girls' High School | 59.50 | 69 |
| 72. | Vithursha Punniyamoorthy | J/Vembadi Girls' High School | 59.50 | 69 |
| 73. | Praveena Sivakumar | J/Vembadi Girls' High School | 59.50 | 69 |
| 74. | Piranavi Sritharan | J/Uduvil Girls' College | 59.00 | 74 |
| 75. | Kamsanaa Navaseelan | J/Hindu Ladies College | 59.00 | 74 |
| 76. | Jayakumar Kajalapriya | J/Hindu Ladies College | 59.00 | 74 |
| 77. | Thakshaji Tharmarasa | Chundikuli Girls' College | 58.50 | 76 |
| 78. | Thushany Suresh | J/Kokuvil Hindu College | 58.50 | 76 |
| 79. | Vaishnavy Gopalapillai | J/Hindu Ladies College | 58.00 | 78 |
| 80. | Umashankar Varajith | j/Hindu College | 57.50 | 79 |
| 81. | Danushiya Arutselvar | J/Hindu Ladies College | 57.50 | 79 |
| 82. | Jeyamohan Sanmugapriyan | j/Hindu College | 57.50 | 79 |
| 83. | Jothirajan Banupiriya | J/Arunodaya College | 57.30 | 82 |
| 84. | Jegatheeswaran Sarushan | j/Hindu College | 57.00 | 83 |
| 85. | Biranavy Raveendran | J/Vembadi Girls' High School | 57.00 | 83 |
| 86. | Sopitha Murugananthan | J/Vembadi Girls' High School | 56.50 | 85 |
| 87. | Lathushah Murugananthan | J/Chundikuli Girls College | 56.25 | 86 |
| 88. | Kajaani Suthas | J/Vayavilan Central College | 56.25 | 86 |
| 89. | Sadhurthika Langesan | J/Hindu Ladies College | 55.50 | 88 |
| 90. | Nilani shanmugarajah | J/Uduvil Girls' College | 55.00 | 89 |
| 91. | Shathusnavi Ratnaruban | J/Chavakachcheri Hindu College | 55.00 | 89 |
| 92. | Vithursana Suthagar | J/Chundikuli Girls College | 54.50 | 91 |
| 93. | Rajeeka Ravichandran | J/ramanathan College | 54.50 | 91 |
| 94. | Lojanaa Thavakeeswaran | J/Vembadi Girls' High School | 54.25 | 93 |
| 95. | Laksia Paraparan | J/Hindu Ladies College | 53.25 | 94 |
| 96. | Kirupakaran Sivajanani | J/Hindu Ladies College | 53.00 | 95 |
| 97. | Sivanja Sivakumar | J/Kokuvil Hindu College | 53.00 | 95 |
| 98. | Abinaya Kathirgamanagarasha | J/Kokuvil Hindu College | 53.00 | 95 |
| 99. | Senthury Paramananthan | J/Vembadi Girls' High School | 53.00 | 95 |
| 100. | Sathurgini Kalanantharasan | J/Hindu Ladies College | 53.00 | 95 |
| 101. | Arullingam Thanushyan | j/Hindu College | 52.50 | 100 |
| 102. | Vithusha Thushyanthan | J/Uduvil Girls' College | 52.50 | 100 |
| 103. | Saththiyaseelan Pirathap | j/Hindu College | 52.00 | 102 |
| 104. | Kethaahini Vishnukanthan | J/Vembadi Girls' High School | 52.00 | 102 |
| 105. | Nivethiga Jeyanthan | J/Hindu Ladies College | 52.00 | 102 |
| 106. | Athmiga Thevagnanan | J/Vembadi Girls' High School | 52.00 | 102 |
| 107. | Pavapragashini P | J/Hindu Ladies College | 52.00 | 102 |
| 108. | Vaishnavi Uthayakumaran | J/Uduvil Girls' College | 51.50 | 107 |
| 109. | Dilakshana Sivakumar | J/Kokuvil Hindu College | 51.00 | 108 |
| 110. | Nilogini Prathapan | J/Vembadi Girls' High School | 50.50 | 109 |
| 111. | Sharanja V | J/Uduvil Girls' College | 50.50 | 109 |
| 112. | Jenotha Sivapatham | J/Kokuvil Hindu College | 50.50 | 109 |
| 113. | Thayalan Tharujan | j/Hindu College | 50.00 | 112 |
| 114. | Mugunthan Tharmiya | J/Chavakachcheri Hindu College | 50.00 | 112 |
| 115. | Loganathan Thushan | J/union College | 50.00 | 112 |
| 116. | Sivaranjani Sivanesasarma | J/Hindu Ladies College | 50.00 | 112 |
| 117. | Arani Sivasakthivel | J/Vembadi Girls' High School | 50.00 | 112 |
| 118. | Sanoja Nalliah | J/Vembadi Girls' High School | 50.00 | 112 |
| 119. | Shangavi Nanthakumar | J/Chundikuli Girls College | 49.50 | 118 |
| 120. | Suthan Tharun | J/Vayavilan Central College | 48.50 | 119 |
| 121. | T.Dhanushan | j/Hindu College | 48.00 | 120 |
| 122. | Yarlventhan Mathurshan | J/st.John's College | 48.00 | 120 |
| 123. | Judit Luxshana Geroge Simon | J/Chundikuli Girls College | 48.00 | 120 |
| 124. | Mathumitha Puvaneswaran | J/Chundikuli Girls College | 47.50 | 123 |
| 125. | Samthavachelvam KevinRockman | J/st.John's College | 47.50 | 123 |
| 126. | Nithushanthini Mahendrarajah | J/Chundikuli Girls College | 47.50 | 123 |
| 127. | Sambavi Srialagan | J/Hindu Ladies College | 47.00 | 126 |
| 128. | Amshavy Eswaran | J/Chundikuli Girls College | 47.00 | 126 |
| 129. | Thayalaneethiny Kumarasamy | J/Vembadi Girls' High School | 47.00 | 126 |
| 130. | Dharsika Koneswaran | J/Hindu Ladies College | 47.00 | 126 |
| 131. | Pakeerathan Thilaxshana | J/Arunodaya College | 47.00 | 126 |
| 132. | Thivya Navaneetharajah | J/Hindu Ladies College | 47.00 | 126 |
| 133. | Senthilnathan Kajaruban | j/Hindu College | 46.50 | 132 |
| 134. | Thayakaran Kamsajini | J/Hindu Ladies College | 46.50 | 132 |
| 135. | Saththiyarubhiny | J/Hindu Ladies College | 46.00 | 134 |
| 136. | Pirakashini Selvakumar | J/Manipay Ladies College | 46.00 | 134 |
| 137. | Sivakumar Sivahajan | j/Hindu College | 45.50 | 136 |
| 138. | Karsana Yogeswaran | J/Chundikuli Girls College | 45.50 | 136 |
| 139. | Yathavi Thiyagarasa | J/Hindu Ladies College | 45.50 | 136 |
| 140. | Sneka Mahathevan | J/Vembadi Girls' High School | 45.00 | 139 |

(8324)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.